உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 21] பிலவ - சித்திரை - 10—5—62 [இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

குருவருள்

உலகில் வாழப்பிறந்தவையே எல்லா உயிர்களும்; ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரை. அவற்றுள்ளும் மனிதர்களே 'வாழுநம் என்னும் செருக்கோடு' வாழ்ந்து வாழ்வின் பயன் பெறுவோர். மனிதருள்ளும் எத்தனைபேர் வாழ்வின் பயனை எய்தியோர் என்று சொல்ல முடியும்? வாழ்வின் பயனை எய்துதல் என்பது, உலகில் பிறந்தது - வளர்வது - வாழ்வது ஏன் என்ற உள்முகச் சிந்தனையால் வருவது. உலகப் புறத்தோற்றங்களில் - கவர்ச்சிகளில்

அறிவு மயங்கி இந்தக் குறிக்கோளை மறந்தவர் - மறக்கின் றவர் பலபேர். குறிக்கோளை மறந்தால் உய்தியும் கூடுங் கொல் ? ' திருநாவுக்கரசர் குறிக்கோளிலாது கெட்டேன் ' என்றூர்கள். குறிக்கோள் இல்லாது நெறியல்லா நெறிச் செல்வோர் எய்துவது கேடொன்றே என்பது அப்பெருமானூர் திருவுள்ளம்.

மனிதர்களுக்குக் குறிக்கோளை உணர்த்துவோன் யார் ? நெறியறிவித்து நெறிகாட்டும் நேரியோன் யார் ? ' மாலும், காட்டி, வழிகாட்டி வாரா உலக நெறியேறக் கோலம் காட்டிக் ' கோதாட்டும் குரிசில் யார் ? அறியாமையகற்றி அருள் வெளியைச் சுட்டும் பெருந்தகை யார் ? ' அருளால் எதையும் பார்க்க ' அறிவிக்கும் அருட்செம்மல் யார் ? ஆசாரியனுகிய குருநாதனே என்கின்றது நம் சாத்திரம். குருவின் திருவார்த்தை கேட்டல், குருவின் திருமேனி காண்டல், குருவின் திருநாமம் செப்பல், குருவின் திருவுரு வைச் சிந்தித்தல் ஆகியவையே தெளிவு பெறுதற்குக் கருவி யாயிருப்பவை என்பர் நம் சான்றோர்.

இறைவன் ' மன்னும் அருட்குருவாகி வந்து, ஐம்புல வேடரின் நீக்கி, மலம் அகற்றித் தான் ஆக்கி மலரடிக்கீழ் வைப்பன் ' என்பது சாத்திரமெய்ம்மை.

' சூரியகாந்தக் கல்லினிடத்தே செய்ய சுடர் தோன்றி யிடச் சோதி தோன்றுமாபோல், ஆரியனும் ஆசான் வந்தரு ளால் தோன்ற, அடிஞானம் ஆன்மாவிற் றேன்றும் ' என்பது அருணந்திசிவத்தின் அருள்வாக்கு.

திருமுறை வாக்குகளைத் தொகுத்தருளிய அகத்திய முனிவர் பெருந்திரட்டும் ' குருவருளை ' முன்னிட்டே நிற்கின் றதாதலைச் சைவ உலகம் நன்கு தெளியும்.

குருவருள் தேக்கமாக நின்று, ஓடிவரும் காரணர்க்கு உண்மை வைக்கும் திருவருள் நிலையங்களே ஞானுதீனங் களும் திருமடங்களும். இத்தருமையாதீனம் கடந்த பல நூற்றுண்டுகளாகச் சைவ சித்தாந்த மரபு நெறியில் தலை சிறந்து விளங்கிவரும் ஞானுதீனம் ஆகும். இதனைத்

தருமையில் நிறுவியருளிய ஆதி பரமாசாரியராகிய, ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக மூர்த்திகளின் குருபூசைத் திருநாள் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றுவருகின்ற பெருமாண்பை அன்புலகம் என்றும் மறவாது. குருவின் திருநாமம், குருவின் திருவார்த்தை, குருவின் திருவுருவச் சிந்தனை, இப்போது எழுந்தருளியிருக்கும் 25 ஆவது குரு ஞானசம்பந்த தேசிக சுவாமிகளின் திருமேனித் தரிசனம் - ஆகிய அனைத்தும் அடியார் - அன்பர் குழாங்கள் புரிந்து பேரருட்பெருவாழ்வு எய்துதல் இக்குருபூசையையோட்டி நிகழும்.

16—5—62 முதல் 26—5—62 முடிய குருபூசை, பட்டணப்பிரவேசத்தையோட்டி நிகழும் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள் குருவருள் பெருக்கும் திருநாட்களாகவே அமைந்துள்ளன. சமயகுரவர், சந்தானகுரவர், வழிக்குரவர் நினைவுத் திருநாட்களாகவே அமைந்துள்ளன. தெளிந்த அறிவும் கனிவும் உடைய பேரறிஞர்களும், பெரும் புலவர்களும், செந்தமிழ்ச்சொக்கர் திருவருட்கு ஆட்பட்டுப் பெருஞ்சிறப்பு எய்திய வித்தகர்களும் கலந்துகொண்டு 'திருநெறிய தெய்வத்தமிழ்' மணம் பரப்புகிறுர்கள். தமிழ் கூறு நல் உலகம் பெறும் சிந்தனைவிருந்தாக இம்மாநாடு வழக்கம்போல் அமையும்.

மனவளம் காத்துக் குருவருள் பெறுவிக்கும் மருந்து போல் நம் சாத்திரங்கள் அமைவன. அச்சாத்திரங்களை முறையாகக்கேட்டுச் சிந்திக்கும் நல்வாய்ப்பையும் 'சித்தாந்த வகுப்பாக' நல்லுலகம் ஏற்கின்றது. சாத்திரப் பேராசிரியர் இருவர் தரும் விளக்கம் சாத்திர வகுப்புக்கு நற்றுணைபுரியும். எல்லாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் கருணைவளம். அந்தப் பெருங்கருணை வளத்துக்குத் தமிழ் உலகு என்னகைம்மாறு செய்ய இயலும்? அவர்கள் திருவடிகளைப் போற்றி, வணங்கி, இருமைப்பயன்களையும் எய்தி மகிழ்வதே செய்ய இயலும்.

வாழ்க குருவருள்! வளர்க சிவபத்தி!!

மணக்குடி கும்பாபிஷேகத் திருநாளில்—

சைவப்பெருமக்கள் அளித்த பாராட்டு விழாவில்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

திருவாய் மலர்ந்த

*அருளுரை

அன்பர்களே !

வாழ்க்கையில் பெறுதற்கரிய பேறு என்பது சில சமயங்களிலேயே கிடைக்கிறது. இன்று அப்படிப்பட்ட ஒரு சிறந்த பேறு எல்லோருக்கும் கிடைத்துள்ளது. கும்பாபிஷேகக்காட்சி என்பது எப்போதோ கிடைக்கும் ஒன்றல்லவா? அப்படிப்பட்ட நல்லருள் வாய்ப்பைப்பெற்று இன்று எல்லோரும் திருவருள் வெள்ளத்தில் மூழ்கித் திளைத்திருக்கின்றீர்கள். நமது அன்பர் திரு. மாதவம் பிள்ளை அவர்கள் "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்ற அடிப்படை உண்மையை விளக்கி அழகாகப் பேசினார்கள். திருக்கோயில் தத்துவ விளக்கங்கள் பலவற்றையும் விளக்கினார்கள்.

திருவருள்தான் மனித வாழ்க்கையை இயக்கிச்செல்கிறது என்ற எண்ணம் எல்லோருக்கும் விளைதல்வேண்டும். திருவருள் இல்லையானால் - திருவருளில் நம்பிக்கை இல்லையானால் வாழ்க்கை கலங்கரை விளக்கமில்லாத கடல் தோணியாகத்தான் அமையும். அன்று நாடாண்ட மன்னர்களும், குடிமக்களும் கடவுளை நம்பியே வாழ்ந்தனர். சோழ மன்னர்கள் செய்துள்ள திருக்கோயில் திருப்பணிகளை எண்ணிப்பாருங்கள். அக்கால அரசியலை மன்னர்கள்கண்காணித்தனர் என்று சொல்வதைவிடப் புலவர்கள்தான் போற்றிவந்தனர் என்று சொல்வது மிகப் பொருத்தம்.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்பது அக்காலப் பழமொழி. 'நீறில்லா நெற்றிபாழ்' என்ற பாட்டு பள்ளிப் பிள்ளைகளுக்கு இளமையில் பயிற்றும் பாடம். எல்லோரும் அன்றும் திருவருள் நெறிநின்று வாழ்ந்த சிறப்பை நாம்

---

* தருமையாதீனத்திற்குச் சொந்தமான மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேகத் திருநாளில் (23—4—62) அளித்த வரவேற்பில் வழங்கியருளியது.

இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் வரலாறுகள் மூலம் நன்ருக அறிகின்ருேம். இவை நமக்கு உணர்த்தும் பாடம் என்ன? திருவருள் இல்லையானல் வாழ்வு சிறக்காது என்பதுதானே.

துறவிகள் தந்நலம் கருதாதவர்கள் என்பதனுல்தான் தரும ஸ்தாபனங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சுய நலமிகள் பலர் ஏழைகளிடம் ஆசைவார்த்தை காட்டி அவர்களை மயக்கித் தவருன வழிகளில் இன்று இழுத்துச்செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏழைகளின் உள்ளம் திருந்தவேண்டும். தன்னுழைப்பினுல் ஈட்டிய பொருளே தனக்கு நிலையானது என்ற எண்ணம் உண்டாகவேண்டும். கடமை உணர்ந்து நடந்தால் உரிமை பறிபோகாது.


இன்று மணக்குடி சைவப் பெருமக்கள் அளித்த பாராட்டுரைகளை எல்லாம் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளுக்குச் சமர்ப்பிக்கின்றேன். இவ்வூர்க் குடிமக்கள் அனைவரும் இத்திருக்கோயிலை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வாரந்தோறும் ஒரு நாள் எல்லோரும் கூடிவந்து வார வழிபாடு செய்யவேண்டும்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கிளைக்கழகம் என்ற பெயரில் திரு. முருகையாப் பிள்ளை அவர்களைத் தலைமையாக அமைத்து இன்று வார வழிபாட்டைத் தொடங்கிவைக்கின்ருேம். எல்லோரும் இவ்வழிபாடு தொடர்ந்து நடைபெற ஆவன செய்தல் வேண்டும். ஆண்டவன் திருப்பெயரை ஓதினுல் உங்களுக்கு ஒரு குறையும் வராது. ‘ சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை" என்பது அநுபவம்.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான
மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி தேவஸ்தானம்
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்




யாகசாலையிலிருந்து கடம் எழுந்தருளியாகி வலம் வருதல்



மகா கும்பாபிஷேகக்காட்சி

தருமையாதீனம் ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்
ஏழூர்த் திருவிழா-திருப்பழனம்



திருவேதிகுடி



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்
தஞ்சைத் துணை ஆணையர் (H. R. & C. E.) அவர்களும்
மற்ற அன்பர்களும்

அப்பர்சுவாமிகள் அற்புத விளக்கம்

சமயாசாரியர் நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள்போற்றி.

திருநாவுக்கரசர் துதி

இடையருப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவாரத்தின்
படையருத் திருக்காமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்தநெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப்பாடல்
தொடையருச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும்
துதித்துவாழ்வாம்.

அவதாரம்

சைவ சமயாசாரியர் நால்வருள் இரண்டாமவராக வைத்து எண்ணப்படுபவர் திருநாவுக்கரசர். கி. பி. 7-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் நடுநாட்டில் உள்ள திருவாமூரில், சைவவேளாளர் குலத்தில், குறுக்கையர் குடியில், புகழனுர்க்கும், மாதினியார்க்கும் அருந்தவச் செல்வராய்த் திலகவதியார்க்குப் பின் தோன்றிய வர்கள். மருள்நீக்கியார் என்பது இவரது பிள்ளைத் திருநாமம். இவரது இளமைப்பிராயத்திலேயே பெற்ருேர் பிரானடி சேர்ந்தனர். பெற்ருேரது பிரிவாலும், பெற்ருேர் களால் தமக்கு மணாளனுக உறுதிசெய்யப்பட்ட கலிப் பகையார் போரில் உயிர்துறக்க நேர்ந்ததாலும் ஏற்பட்ட வருத்தத்தால் தானும் உயிர்துறக்க எண்ணினுர் திலக வதியார். இஃதறிந்த மருள்நீக்கியார் தமக்கைக்கு முன் தாம் உயிர்துறக்கத் துணிந்தார். தம்பியார் உளராக வேண்டும் என வைத்த கருணையினுலே உயிர்தாங்கி மனைத்

தவம் புரிந்துவந்தார் திலகவதியார். இந்நிலையில் மருள் நீக்கியார் உயிர்க்கு உறுதிபயக்கத்தக்க சமயம் எதுவென ஆராய்ந்து சமணசமயம் சார்ந்தார். அச்சமயத்தில் 'தருமசேனர்' என்ற பட்டம்பெற்றுச் சிறப்பெய்தினர்.

1. சூலை தீர்த்தாட்கொள்ளல்

தம்பியருக்காக உயிர்தாங்கித் தவம்புரியும் திலகவதியார் திருவதிகைப் பெருமானிடம் 'தம்பி சைவம் சாரவேண்டும்' என்று விண்ணப்பித்து வந்தார். அதிகைப் பெருமானும் 'அன்னவனைச் சூலை கொடுத்து ஆட்கொள்வோம்' என்று அருள்செய்தார். சிலநாளில் தருமசேனரான மருள்நீக்கி யார் சூலைநோயால் துன்புற்றார். அமண் சமய அருகரால் சூலை தீராதுபோகவே தம்தமக்கையாரிடம் சார்ந்து பணிந்தார். திலகவதியார் திருவாளன் திருநீற்றை ஐந்தெழுத்தோதிக் கொடுத்து அதிகைப் பெருமான் சந்நிதிக்கு அழைத்துச் சென்றார். ஆண்டவனருளால் பாடும் உணர்வுபெற்ற மருள்நீக்கியார் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற திருப்பதிகம் பாடிப் பரவினர் இறை யருளால் சூலை நீங்கியதோடு திருநாவுக்கரசர் என்ற பெயரும் பெற்றார். "சூலை தீர்த்து அடியேனை ஆட் கொண்டாரே" என்பது அப்பரடிகள் அகச்சான்று.

2. நீற்றறை நின்மலன் அருளால் குளிர்ந்தது

இச்செய்தியுணர்ந்த அமணர்களும் அமணர் வயப் பட்ட மகேந்திரவர்மப் பல்லவ மன்னனும் இவருக்குப் பல வகையிலும் இன்னல் விளைவிக்கத்திட்டமிட்டு நாவுக்கரசரை அழைத்துவரச் செய்தனர். நாவரசர் "நாமார்க்கும் குடி யல்லோம்" என்ற தாண்டகம் பாடி அவரெதிர் சென்றார். அமணர்கள் இவரை நீற்றறையில் (சுண்ணாம்புக்காளவாய்) இட்டனர். அங்கு "மாசில்வீணை" என்ற திருப்பதிகம் பாடி நீற்றறையைக் குளிரச் செய்தார்.

3. நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு

நீற்றறையில் வேகாது பிழைத்த திருநாவுக்கரசர் 'தங்கள் சமண் சமயத்தில் கற்றிருந்த மந்திரவலிமையால் தான் நீற்றறையில் வேகாது பிழைத்தார்' என்ற துர்ப்போத னையை அரசனுக்குக் கூறினர். நஞ்சுகலந்த பால்சோற்றை

நாவரசர்க்கு அருத்தினர். 'நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு' என்று நஞ்சுணவை ஏற்று உண்டு ஊன மொன்றும் இன்றி உயிர்வாழ்ந்தார் நாவரசர்.

"வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே"

என்பது அப்பர் சுவாமிகள் அகச்சான்று.

4. இடர்செய ஏவிய யானை பணிதல்

நஞ்சு உண்டும் உயிர்பிழைத்த நாவுக்கரசரைக் கொலைத் தொழில் வல்ல யானையைவிட்டு இடறச்செய்தனர். மதயானை வருதலைக்கண்ட நாவரசர் "அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும் இல்லை" என்ற உள்ள உறுதியோடு "சுண்ணவெண் சந்தனச்சாந்தும்" என்ற திருப்பதிகம் அருளினர். கொலைத்தொழில்வல்ல யானையும் நாவரசரை வலம் வந்து வணங்கித் தன்னையேவிய அமணர்களையே துன்புறுத்தியது.

"தலைவணங்கிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கோன்றிடுகிற்குமே"

என்பது அப்பர்சுவாமிகள் அகச்சான்று.

5. கல்லே மிதப்பாய்க் கடலைக் கடந்தது.

சமணர்கள் தாங்கள் செய்த சூழ்ச்சிகள் பலவற்றாலும் துன்புறாத திருநாவுக்கரசரைக் கடைசியாகக் கல்லில் கட்டிக் கடலில் இட்டனர். அரன் ஐந்தெழுத்தை ஓதி அக்கல்லே தோணியாகக் கடலில் மிதந்துவர, திருப்பாதிரிப்புலியூருக்கு அருகில் கரையேறினர். கரையேறிய இடம் கரையேறவிட்ட குப்பம் என்ற பெயரோடு இன்றும் திகழ்கிறது.

"கல்லினோடு எனைப்பூட்டி அமண் கையர்
ஒல்லை நீர்புக நூக்களன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே."

"கல்துணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நல்துணையாவது நமச்சிவாயவே."

என்பன அப்பரடிகளின் அகச்சான்று.

6. சூலக்குறியும் இடபக் குறியும், ஆலமுண்டானது அருளால்பெற்றது

கடலினின்றும் கரையேறிய திருநாவுக்கரசர் தமக் குற்ற துன்பங்களைத் துடைக்க இறைவன் தந்தையும், தாயும், தமக்கையுமாய் உதவி செய்த நன்றியையுணர்ந்து போற்றுவாராய்த் திருப்பாதிரிப்புலியூர்த் திருக்கோயிலைச் சார்ந்து, ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய் உடன்றோன் றினராய், என்ற திருப்பதிகம் பாடிப் பரவினர். அமணர் சூழ்ச்சியும் நாவரசர் மாட்சியும் உணர்ந்த பல்லவ மன்னன் தானும் சமணசமயத்தை விட்டு சைவம் சார்ந்தான். அமண் பாழிகளையும் பள்ளிகளையும் இடித்து அக்கற்களைக் கொண்டு திருவதிகையில் 'குணபரவீச்சரம்' என்ற சிவன் கோயிலை எடுப்பித்தான். பின்னர் நாவரசர் சிவ தல யாத் திரை மேற்கொண்டு திருப்பெண்ணாகடம் என வழங்கும் திருத்தூங்கானை மாடம் சென்று தொழுதார். அங்குள்ள இறைவனிடத்துத் தாம் சமண் சமயம் சார்ந்ததால் ஏற் பட்ட மாசு நீங்க சூலக்குறியும் இடபக்குறியும் பொறித் தருள வேண்டினர். அவ்வாறே இறையருளால் சூலக் குறியும் இடபக்குறியும் பொறிக்கப்பெற்றார்.

பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம் போற்றி [செய்யும்
என் ஆவி காப்பதற்கு இச்சையுண்டேல் இருங்கூற்று அகல
மின்னாரு மூவிலைச் சூலம் என்மேற் பொறிமேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச்சுடர்க் கொழுந்தே''

என்பது அப்பர் அடிகளின் அகச்சான்று.

7. தில்லைக்கூத்தன் திருவடி தொழுதது

சூலக்குறியும் இடபக்குறியும் பொறிக்கப்பெற்ற திரு நாவுக்கரசர் பலதலங்களையும் வணங்கிக்கொண்டுதில்லையை அடைந்து கூத்தப்பெருமான் குஞ்சிதபாதம் தொழுதார். ''என்று வந்தாய் எனும் எம்பெருமான்றன் திருக்குறிப் பைப்'' புலப்படுத்திப் பதிகங்கள் பல பாடினர். அவ்வூரை விட்டுப் புறப்படுங்கால் அத்தலத்தை உடலால் புரண்டு புரண்டு (அங்கப்பிரதக்ஷிணம்) வலம்வந்தார்.

8. அரசும் கன்றும் அரனடி தொழுதது

திருநாவுக்கரசர் தில்லையில் இருந்தபொழுது சீகாழியில் உமாதேவியாரால் ஞானப்பால் உண்டு திருஞானசம்பந்தராய்த் திகழ்ந்த ஆளுடையபிள்ளையாரின் அருள் திறம் கேட்டு அவரை வணங்க விரும்பினுர். சீகாழி எல்லையை அடைந்தார். நாவரசர் வருவதறிந்த திருஞானசம்பந்தர் இவரைச் சீகாழி எல்லையில் பரிவாரங்களோடும் எதிர்வந்து வரவேற்ருர். சிவவேடப் பொலிவழகோடு திகழ்ந்த நாவரசரை அப்பரே! என்று அழைத்தருளினுர். இதுமுதல் அப்பர் என்ற பெயர் வழங்கலாயிற்று. நாவரசரும் கலைஞானக்கன்ருகிய ஞானசம்பந்தர்முன் "அடியேன்" என்று மறுமொழி கூறினுர். ஞானக்கன்ரும் சம்பந்தரும், நாவுக்கரசரும் தோணியப்பரைப் பதிகம்பாடிப் பரவினர்.

9. நல்லூர்ப்பெருமான் நற்ருள் சூட்டல்

காழிநாதன் கழலடி வணங்கிய அப்பரடிகள் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருச்சத்திமுற்றம் சென்று அங்குள்ள இறைவனிடம் தமக்குத்திருவடிதீக்ஷைஅருளுமாறு வேண்டினுர். பெருமானும் நல்லூருக்கு வருக என்றருளி நனைந்தனைய திருவடி சூட்டியருளினுர்.

"கோவாய் முடுகியடுதிறல் கூற்றம் குமைப்பதன்முன்
பூவாரடிச் சுவடு என்மேல் பொறித்துவை"

"இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானுர் நல்லவாறே"

என்பன அப்பரடிகள் அகச்சான்று.

10. அரசரும் அப்பூதியடிகளும்

திருவடிதீக்ஷை பெற்ற நாவரசர் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திங்களூர் வந்தடைந்தார். அந்தணரின் மேம்பட்ட அப்பூதியடிகளார் தமது புதல்வருடன் சாலை, குளம், கிணறு. தண்ணீர்ப்பந்தல் முதலிய எல்லா அறங்களையும் திருநாவுக்கரசர் பெயராலேயே அமைத்திருந்ததைக் கண்டும் கேட்டும் காரணம் அறிவதற்காக அப்பூதியடிகளைக் காணச்சென்ருர். அப்பூதியடிகளின்

செந்தண்மையைக்கண்ட நாவரசர் அவரது விருப்பத்திற் கிணங்கி அமுதுகொள்ள இசைந்தார். திருவமுது படைப் பதற்கு இலை கொணரச்சென்ற மூத்த திருநாவுக்கரசு அரவம் தீண்டியதால் வாழையிலையைத் தாயிடம் சேர்ப் பித்து உயிர்நீத்தார். இறந்த பிள்ளையை மறைத்துவைத்து அப்பருக்கு அமுது செய்விக்க முயன்றனர். அமுதுகொள்ள எழுந்தருளிய அப்பரடிகள் மூத்த திருநாவுக்கரசு அரவந் தீண்டி இறந்ததை யறிந்து அவ்வுடலைத் திருக்கோயிலின் முன் கொண்டுவரச்செய்து "ஒன்று கொலாமவர்" எனுந் திருப்பதிகம்பாடி உயிர் பெற்றெழச்செய்தார்.

11. அப்பர் சம்பந்தர்க்கு ஆதிரைச் சிறப்பைச் செப்பி மகிழ்ந்தார் திருப்புகலூரில்

விடம் தீர்த்த திருப்பதிகம் அருளிச்செய்த திருநாவுக் கரசர் திருவாரூர்த் தியாகேசப் பெருமான் கழலடிதொழுது "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் தமக்கும் உண்டாகுமோ" என்ற கருத்தமைந்த பதிகம் முதலாகப் பல பதிகங்கள் பாடிப் பரவினர். திருவாதிரைத் திரு நாளில் தியாகேசப்பெருமான் திருவுலாக்காட்சியைக் கண்டுதொழுத அப்பரடிகள் அங்கிருந்தும் திருப்புகலூர் சென்றார். அப்பொழுது திருஞானசம்பந்தர் சீகாழியினின் றும் புறப்பட்டுப் பல தலங்களையும் வணங்கித் திருப்புகலூர் அடைந்து முருக நாயனர் திருமடத்தில் எழுந்தருளியிருந் தார். அவர் திருநாவுக்கரசரின் வரவையறிந்து, அடியார் புடைசூழ எதிர்கொண்டு வரவேற்றார். ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர்பால் ஆரூரில் நிகழ்ந்த ஆதிரைச்சிறப்பைக் கேட்டுத் தாமும் திருவாரூர் சென்று தொழுது திரும்பினர். திரும்புங்கால் திருநாவுக்கரசர் அடியார்கள் புடைசூழ ஞானசம்பந்தரை வரவேற்று மகிழ்ந்தார்.

12. படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தது

ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும்அடியார்கள்புடைசூழ, திருக்கடவூர் முதலிய பலதலங்களையும் வணங்கிக்கொண்டு திருவீழிமிழலை சென்றனர். அப்பொழுது மழையின்மையால் பஞ்சம் உண்டாயிற்று. அப்பஞ்சத்தால் அடியவர்கள் துன்புறுவண்ணம் கோயிலின் கிழக்குப் பீடத்தில் திருஞான சம்பந்தருக்கும், மேற்குப் பீடத்தில் திருநாவுக்கரசருக்கும் மிழலைப்பெருமான் படிக்காசு நாள்தோறும் வைத்துவந்தார்.

அக்காசுகொண்டு அடியவர்கட்கு இருமடங்களிலும் பறை சாற்றிச் சோறிட்டனர். உழவாரத் தொண்டு செய்த பான்மையினல் வாசியில்லாக்காசுபெற்ருர் வாகீசர். ஞானப் பால் உண்டமையால் திருக்குமாரராம் பான்மைவாய்ந்த ஞானசம்பந்தர் வாசியுள்ளகாசு பெற்ருர். (வாசி - வட்டம் கொடுத்து மாற்றும் காசு.) "இருந்துநீர் தமிழோடிசை கேட்கும் இச்சையால்காசு நித்தம்நல்கினீர்" என்ற சுந்தரர் வாக்காலும்,

"பாடலங்காரப் பரிசில் காசருளிப் பழுத்த செந்தமிழ்மலர்சூடி
நீடலங்காரத்து எம்பெருமக்கள் நெஞ்சினுள் நிறைந்து
நின்ருனே"

என்ற திருவிசைப்பாவாலும் இந்நிகழ்ச்சியை நன்கு தெளியலாம்.

13. திருமறைக்காட்டில் கதவு திறந்தது

பஞ்சம் நீக்கிய இருபெருமக்களும் வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காட்டிற்குச் சென்று திருக்கோயிலே வலம்வந்து வாயிலே அடைந்தனர். கதவு அடைக்கப் பட்டிருப்பதை வினவினர். 'முற்காலத்தில் வேதங்கள் வழி பட்டுத் திருக்காப்பிட்டுச் சென்றன. அதுமுதல் பக்கத்திலே வாயில் அமைத்து அன்பர்கள் வழிபட்டு வருகின்றனர்' என்பதை அங்குள்ளோரால் அறிந்து நேரே கும்பிட வேண்டும் என்ற விருப்புடையோர் ஆயினர். திருஞான சம்பந்தர் நாவுக்கரசரைப் பார்த்துத் திருக்கதவம் திறக்கு மாறு பாடியருளுக என்ருர். அதற்கிணங்க அப்பர் சுவாமிகள் "பண்ணின் நேர்மொழியாள்" என்று தொடங்கும் திருப்பதிகத்தில் பத்துப் பாடல்கள் பாடியும் கதவு திறவாமையால் பதிேைராவது பாடலில் "இரக்கம் ஒன்றிலீர்" என்று பாடி வணங்கிய அளவில் மறைக்கதவம் திறக்கப்பெற்றது. இருவரும் நிலமுறப் பணிந்தனர். திருநாவுக்கரசரது விருப்பத்திற்கு இணங்கத் திருஞான சம்பந்தர் அடைக்கப் பாடினர். அன்று முதல் திறக்கவும் அடைக்கவுமாக இருந்து வருகிறது கதவு.

14. திருவாய்மூரில் சிவனுருக் கண்டது

திருநாவுக்கரசர் தாம் அரிதின் முயன்று திறக்கப் பாடியருளியதையும், ஞானசம்பந்தர் ஒருபாடலில் அடைக்கப்

பாடியருளியஎளிமையினையும்எண்ணிப் பெருமான் திருவுள்ளக்கிடக்கையை உணராது அயர்ந்தேன் என்ற கவலை உடையவராய் அறிதுயில் கொண்டார். அப்பொழுது வெண்ணீறணிந்த கோலத்தோடு இறைவன் எழுந்தருளி 'நாம் திருவாய்மூரில் இருப்போம் அங்கு எம்மைத் தொடர்ந்துவா' என்றருளிமறைந்தனர். துயிலுணர்ந்த நாவரசர்

"எங்கே யென்னை இருந்திடம் தேடிக்கொண்டு
அங்கே வந்தடையாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார் அதேன்கோலோ."

என்ற பாடலை முதலாக்கொண்ட பதிகம் பாடிக் கனவில் தோன்றிய வடிவத்தோடு இறைவன் வழிகாட்டச் சென்ற இவருக்கு ஒரு பொற்கோயிலைக் காட்டி மறைந்தருளினார் இறைவன். ஞானசம்பந்தர் நாவரசர் திருவாய்மூர் செல்கின்றார் என்பதையறிந்து அங்குச் சென்றார்.

"திறக்கப்பாடிய என்னினும் செந்தமிழ் உறைப்புப்பாடியடைப்பித்தார் உந்நின்றார்" என்று நாவரசர் பாடிய அளவில் திருஞானசம்பந்தருக்கு இறைவன் காட்சிகொடுத்தருளினார். கண்டு தரிசித்த ஞானசம்பந்தர் நாவுக்கர்சருக்கும் காட்டினார். திருநாவுக்கரசர் கண்டு மகிழ்ந்து, "பாட அடியார்பரவக்கண்டேன்" என்ற திருத்தாண்டகம் பாடிப் பரவி இருவரும் திருமறைக்காடு சேர்ந்தனர்.

15. பழையாறைவடதளிப்பரமனைக் காண்டல்

மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் இருவரதுவேண்டுகோட்கிணங்கித் திருஞானசம்பந்தர் பாண்டியநாட்டிற்கு எழுந்தருளினர். திருநாவுக்கரசர் திருமறைக்காட்டினின்றும் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு பழையாறையையடைந்து வடதளியென்னும் கோயிலைநோக்கித் தொழுதார். அக்கோயிலிலுள்ள சிவலிங்கமூர்த்தியை மறைத்துச் சமணர்கள் அருகதேவனைவைத்துத் தொழுதுவந்தனர். இஃது அறிந்த அப்பமூர்த்திகள் சிவலிங்கமூர்த்தியை வழிபட்டே உணவுகொள்வேன் என்று விரதமிருந்தார். அடியவர் கருத்தறிந்து முடிக்கும் ஆண்டவன் சோழமன்னன் கனவில் தோன்றித் தான் இருக்கும் இடத்தை அடையாளங்களுடன்

சுட்டி ஆலயம் அமைக்க ஆணையிட்டருளினர். அவ்வண்ணமே சோழமன்னன் அமணர் மறைத்துவைத்த சிவனுருவைக் கண்டு ஆலயம் அமைத்து வழிபட்டான். அப்பரடிகளும் சென்று வழிபட்டுத்,

" தலையெலாம் பறிக்குஞ் சமண் கையருள்
நிலையினால் மறைத்தால் மறைக்கொண் ணுமோ "

என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிச் சிலநாள் தங்கிப் பணிபுரிந்தார்.

16. திருப்பைஞ்ஞீலியருகில் பொதிசோறு பெறுதல்

திருப்பழையாறைவடதளியினின்றும் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருப்பைஞ்ஞீலிக்கு எழுந்தருளினர். அப்பொழுது பசியும் நீர்வேட்கையும் வருத்தியது. உடல் தளர்ந்தாலும் மனம் தளராவாகீசர் வரும்வழியில் பைஞ்ஞீலி இறைவர் சோலையும், குளமும் தோற்றுவித்துத் தாம் ஒரு அந்தணர் கோலத்தில் பொதிசோறு சுமந்து சென்று நாவரசருக்கு அளித்து அருந்தச் செய்தார். உணவு அருந்திக் களைப்பு நீங்கிய நாவரசரை அந்தணர் வடிவுகொண்ட இறைவன் பைஞ்ஞீலிக்குஅழைத்துச்சென்று மறைந்தருளினர். அவ்வதிசயம் கண்ட அப்பரடிகள் பதிகம் பாடித் துதித்தார்.

17. திருவையாற்றில் கயிலைக் காட்சி

பைஞ்ஞீலிப் பரமனைப் பரவிய நாவரசர் நடுநாட்டுத் தலங்களையும் தொண்டைநாட்டுத் தலங்களையும் தரிசித்துத் திருக்கயிலை யாத்திரையை மேற்கொண்டார். இமயமலைப் பகுதியில் கரடுமுரடான பாதைகளில் நடந்தும் ஊர்ந்தும் நகர்ந்தும் உடலுறுப்புக்களெல்லாம் தேய்ந்து சோர்ந்தார். இந்நிலையில் கயிலைப்பெருமான் முனிவர் வேடம் தாங்கி நாவரசர் முன்தோன்றி " மனிதரால் அடையத்தக்கதன்று திருக்கயிலை " என்று அறிவித்தார். அதுகேட்ட அரசர் " ஆளும்நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் " என்று உரைத்தார். அவரது மனத்திண்மை கண்ட பெருமான் மறைந்து 'ஒங்கும் நாவினுக் கரசநீ எழுந்திரு' என்று அசரீரி அருளினர். அதுகேட்டு ஊறுநீங்கிய உடலுடன் எழுந்த நாவரசர்

கயிலைக்காட்சிவேண்டிப் பணிந்தார். இறைவன் ' அருகில் உள்ள இத்தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றையடைந்து அங்கு நம்திருக்கயிலைக் காட்சியைக் காண்பாயாக ' என்று அருளினர். அவ்வாறே அருகில் உள்ள தடாகத்தில் மூழ்கி ஐயாற்றில் உள்ள திருக்குளத்தில் எழுந்து திருக்கயிலையி லுள்ள காட்சியைக் கண்டு "மாதர்ப் பிறைக் கண்ணி யானை" என்ற திருப்பதிகம் பாடிப் பரவினர்.

18. திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்தல்

கயிலைக் காட்சி கண்ட திருநாவுக்கரசர் திருமழபாடி முதலிய தலங்களை வணங்கி, திருப்பூந்துருத்தியையடைந்து இறைவனைத் தொழுதார். அங்குப் பலநாள் தங்கிப் பணி புரிய விரும்பியதால் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று அமைத்தார். உழவாரப்பணி புரிந்ததோடு திருவங்க மாலை முதலிய பல தொகைத் திருப்பதிகங்களையும் அருளிச் செய்தார். இந்நிலையில் பாண்டிநாடு சென்று சிவநெறி பரப்பிய திருஞானசம்பந்தர் சோழநாட்டிற்கு வந்து திரு நாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் எழுந்தருளியிருப்பதைக் கேள்வியுற்றுத் திருப்பூந்துருத்திக்கு எழுந்தருளினர். அஃதறிந்த திருநாவுக்கரசர் ஞானசம்பந்தரை நேரேகண்டு கும்பிடவேண்டுமென்ற விருப்பினராய் அடியவர் எவரும் அறியாவண்ணம் ஞானசம்பந்தர் எழுந்தருளிய பல்லக் கைச் சுமந்துவந்தார். திருப்பூந்துருத்திக்கு அருகில்வந்த ஞானசம்பந்தர் ' அப்பர் எங்குற்றார் ' என வினவ ' உம் முடைய அடியேன் உமது திருவடிகளைத் தாங்கும் பெரு வாழ்வுவந்து எய்தப்பெற்று இங்குற்றேன் ' என்றார் அப்பர். அதுகேட்டபிள்ளையாரும் சிவிகையினின்றும் இறங்கி ஒரு வரை ஒருவர் வணங்கி மகிழ்ந்து சிலநாள் அத்தலத்து எழுந்தருளியிருந்தனர்.

19. அரம்பையர் வலையில் அகப்படாதிருத்தல்

திருநாவுக்கரசர் பாண்டிநாட்டுத் தலங்களைத் தரிசித்து சோழநாடு மீண்டு திருப்புகலூரையடைந்து உழவாரப் பணி செய்துகொண்டு அங்கேயே தங்கியிருந்தார். அப் பொழுது க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம் முதலிய பல் பதிகங்கள் பாடினர். புகலூரிறைவன் திருக்கோயில் முற்றத்தில் உழவாரப்பணி செய்யும்பொழுது இறை யருளால் பொன்னும் நவமணிகளும் தோன்றின. அவற்றை

யெல்லாம் கல்லோடும் புல்லோடும் தூக்கி எறிந்தார். இவரது நடையருப்பெருந்துறவை நாட்டிற்கு எடுத்துக் காட்டத் தேவ அரம்பையர்களை இவர்முன்னர்த் தோற்றுவித்தார். அவர்களது ஆடல் பாடல்களாலும் இவரது உள்ளம் மாறுபடவில்லை. மாறுபடாமாண்பைப் "பொய் மாயப் பெருங்கடலில்" என்றுதொடங்கும் திருத்தாண்டகப் பதிகத்தால் அருளியுள்ளார்.

20. திருப்புகலூரிற் சிவன்தாள் சேர்தல்

பக்தியின் வடிவுகொண்ட திருநாவுக்கரசர் மெய்யருளை யடையுங்காலம் அணித்தாகவிருப்பதையறிந்து ஆண்டவனது புகலாகிய அடைக்கலப் பொருளாகிய தன்னைப் புகலூர்ப்பெருமான் சேவடிக்கீழ் இருத்துவார் என்ற கருத்துடன் பல திருப்பதிகங்கள் பாடி முடிவாக "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனே" என்று தொடங்கும் திருத்தாண்டகத்தை அருளிச்செய்து அதில் "புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று புகன்று ஒரு சித்திரைச் சதய நன்னாளில் திருவடி நீழலில் இரண்டறக் கலந்தார்.

சமயாசாரியர் குருபூசை நாட்கள்

சித்திரைச் சதயம் அப்பர் சிறந்த வைகாசி மூலம்
அத்தரைப் பணிசம்பந்தர் ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாதவூரர் முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

சந்தானசாரியர் குருபூசை நாட்கள்

சித்திரை யத்தம் உமாபதி ஆவணித் திங்கள்தனில்
உத்திரம் சீர்கொள் மறைஞான சம்பந்தர் ஓதுகன்னிச்
சுத்தமெய்ப் பூரம் அருணந்தி ஐப்பசிச் சோதிதன்னில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

வினை விதைத்தவன்!

செஞ்சோற்கோண்டல்

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன், B. A.,

(மலர் 21, இதழ் 5, பக்கம் 257 இன் தொடர்ச்சி)

காட்சி 6.

[ஜெயப்பிரகாசனது தம்பி இராஜ்ய பிரகாசனும் அவனது நண்பன் விக்கிரமனும் தனித்து சூழ்ச்சி செய்கின்றனர்]

விக்கி : (கவலையோடு உட்கார்ந்திருக்கும் இராஜ்ய பிரகாசனை நோக்கிப் பிரசங்கபாணியில் பேசுகிறுன்),

உரிமை பறிக்கப்பட்டது; உரிமை பறிக்கப்பட்டது. ஊமையாய்க் கிடப்பதா? சுத்த வீரன் சோம்பேறியாவதா? கூடாது ...முடியாது... இராஜ்யபிரகாசா! உன் அண்ணன் ஜெயப்பிரகாசனுக்குரிய இவ்வரசு அவனுக்குப் பின் உனக்குத்தானே! இரண்டு வயதான குழந்தைக்கு இளவரசு பட்டமா ? (சிரிப்பு) அண்ணியாரின் திட்டம் அற்புதம்! அற்புதம்! அபாரம்! (சிரிப்பு).

இராஜ்ய : (எழுந்து) விக்கிரமா! வேதனையை அதிகப்படுத்தாதே.

விக்ரம: வேதனையல்ல, பிரகாசா, சாதனை! நமது எதிர்காலம் குறித்து ஓர் போதனை?

இராஜ்ய ; அடுக்கு மொழி அப்புறமிருக்கட்டும், அறிவைத் தீட்டு முதலில்.

விக்ரம : ...தீட்டிவிட்டேன்; திட்டமும் தீட்டிவிட்டேன்!

இராஜ்ய : என்ன விக்கிரமா!

விக்ரம : ஒரு நாடகம்! அதில் நீதான் கதாநாயகன்! நான் தான் உன் நண்பன்.

இராஜ்ய : (கொஞ்சும் குரலில்) புரியும்படிச்சொல் விக்ரமா!

விக்ரம : (பெருமையாகச் சிரித்து) இடைக்கால நாடகம் ஒன்று நாம் நடிக்க வேண்டும் இராஜ்யா! அண்ணனைப்பிரிந்தசோகம் தம்பிக்கு; அழவேண்டும்; அழ வேண்டும் !

இராஜ்ய : அண்ணனைப் பிரிந்ததால் அழுவதா?-ஆனந்த மல்லவா படவேண்டும்? எப்போது தொலைவான் எமகாதகன் என்றல்லவா ஏங்கியிருந்தோம் இதுவரை?... நாம் விரித்த ஆசை யென்னும் பெருவலைக்கு இப்போதல்லவா இரை கிடைத்தது, விக்ரமா!

விக்ரம : அது அப்போது! இராஜ்யா! விழிக்காதே! விவேகத்தோடு நடந்துகொள்; வெற்றி பெறலாம்!

இராஜ்ய : இம்...அப்புறம்!

விக்ரம : அண்ணியிடம் சென்று ஆரம்பிக்க வேண்டும் நம் அவல நாடகத்தை ; பின்... இங்குவா! (காதோடு காதாகச் சில செய்திகளைக்கூறி)...

இராஜ்ய : பயங்கரமான சோதனை!

விக்ரம : பயந்தால் நடக்குமா? நீ யார்? சாதாரணமானவனா? தலைநிமிர்ந்து நில்! தோளைத் தட்டு! உயர்த்து கையை! உருவு உடைவாளை! நீ இந்நாட்டின் மன்னன்; நேபாள நாட்டின் நிகரற்ற சிங்கம்! உன்னைக்கண்டு அஞ்சி ஓடுவோர் ஏராளம்! ஏராளம்! நீ யாருக்காக அஞ்ச வேண்டும்.

இராஜ்ய : (அசடுவழிய) யாருக்காக அஞ்ச வேண்டும் நான்! விக்ரமா! என் ஆசை!... என் ஆசை! (உரத்து) ஆனாலும் கொஞ்சம்.

விக்ரம : காரியத்தைக் கெடுத்துவிடாதே இராஜ்யா! எங்கே?

இராஜ்ய : (ஓலமிட்டு அழுது) அண்ணா... அண்ணா... தாங்கள் இப்படி என்னைத் தவிக்கவிட்டுப் போகலாமா அண்ணா...(அரற்றி) அண்ணா!

விக்ரம : ஆகா! இது அல்லவா நடிப்பு... நடிப்பு இல்லை இது...

இராஜ்ய : என்ன... ?

விக்ரம : இதயத் துடிப்பு!

இராஜ்ய: (மகிழ்ச்சி) விக்ரமா! விரைந்து நட...

காட்சி 7.

[அரசியின் அந்தப்புரத்தில் - அரசி அமர்ந்திருக்க இரு மருங்கிலும் இராஜ்ய பிரகாசனும், விக்கிரமனும், சோகமான முகத்தோடு]

இராஜ்ய: அண்ணி போனது போகட்டும் என்றுதான் நினைத்து அமைதி கொள்கிறேன்! இருந்தாலும் அண்ணாவின் நினைவு அடிக்கடி என்னைக்... கொல்லாமற் கொல்கிறது அண்ணி, கொல்லாமற் கொல்கிறது!

விக்கிரம: இராஜ்யா! அதை நினைத்து நீ இப்படி உருகிக் கொண்டேயிருந்தால் எப்படி?

தயா; ஆமாம், தம்பி! என்ன செய்வது? கடைசியில் இப்படிக் கைவிட்டுப் போவார் உன் அண்ணன் என்று நான் நினைக்கவே இல்லையே நான்? என்னை இப்படி இளங்குழந்தையோடு அழ அழ விட்டுவிட்டு கங்கைக் கரைக்குப் போய்விடுவார் என்று நான் கனவுகூடக் காணவில்லை... தம்பி!

இராஜ்ய: வருத்தப்படாதீர்கள் அண்ணி! நீங்களும், என் செல்வனுமாவது இருக்கிறீர்களே யென்றுதான் நான் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன்!

விக்ரம: அண்ணனுக்குப்பிறகு இராஜ்ய பிரகாசனுக்கு... சிறு பிள்ளைத்தனம்... ஆட்சி புரிய அவ்வளவு தூரம் போதாது என்ற ...(அரசியின் முகம் மாறுபடுகிறது) பெருந்தன்மையினால் தாங்களே...

தயா: (சமாளித்துக்கொண்டு) ஆமாம்... ஆமாம்... மக்களது மறுக்க முடியாத வேண்டுகோளின் மீதும், மந்திரி பிரதானியரின் கட்டளையின் மீதும் இந்த அரசபாரத்தைத் தாங்க வேண்டி வந்தது? இந்த நாட்டின் துரதிர்ஷ்டம்...

இராஜ்ய: அப்படிச் சொல்லாதீர்கள் அண்ணி! தாங்கள் நாட்டின் அதிர்ஷ்ட தேவதையாகவே விளங்குகின்றீர்கள்? தக்க சமயத்தில் நீங்கள் உதவியிருக்கா விட்டால் எங்கள் கதிதான் என்னுவது? ஆனாலும் ஒன்று, அரசியாரே!

தயா; என்ன. விக்கிரமா?

விக்ரம: மன்னர் ஜெயப்பிரகாசரை மீண்டும் அரசியலுக்கு அழைத்துவர ஒரு தூது கோஷ்டியை அனுப்பி வைத்தால் என்ன? ...(அரசியின் முகம் மாறுபடுகிறது).

தயா: (சமாளித்து) ஆம்... ஆம்... நமது பிரதானியர் ஆறு பேரையும் அனுப்பி அழைத்து வரச் செய்துதான் ஆக வேண்டும்! (வருந்தி நடித்து) அவர் ஒருவர்க்காகத்தானே இந்த உடலில் உயிர் ஊசாலாடிக் கொண்டிருக்கிறது!

இராஜ்ய: வருத்தப்பட வேண்டாம் அண்ணி! அண்ணு நிச்சயம் ஆட்சி ஏற்பார்! நாட்டுக்கு நல்லகாலம் இனி வந்தே தீரும்.

தயா; தம்பி! இப்போது எனக்கொரு யோசனை தோன்றுகிறது?

இராஜ்ய: என்ன அண்ணி!

தயா: (மென்று விழுங்கி) உன்னையும் பிரதானியரோடு சேர்த்து அனுப்பினால், மன்னர் பிரானை நிச்சயமாய்க் காண முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது எனக்கு.

விக்ரம: அதுவும் சரிதான் அரசியாரே !

இராஜ்ய: என் தவந்தான் இவ்வளவு பெரிய பொறுப்பை எனக்களித்திருக்கிறது! இந்த வாய்ப்பைத் தவற விட்டுவிட மாட்டேன்! இந்த நாட்டின்மீது என் உயிரையே அல்லவா நான் வைத்திருக்கிறேன்! (தனக்குள்) மன்னனை என் கரத்தாலேயே கொல்வேன்! உன்னையும் உன் இளவரசுச் செல்வத்தையும்... இரு... இரு...

விக்ரம: அப்படியானால், இராஜ்யா! இப்போதே புறப்படுவதற்கு வேண்டிய முன் ஆயத்தங்களை யெல்லாம் செய்ய வேண்டாமா? புறப்படு !

இராஜ்யா: வருகிறேன், அண்ணி, வணங்குகிறேன்!

(வணங்கி யெழுகிருன்)

தயா: (நடித்து) கடமை தவருத தம்பி! உன் கடமை என்னையும் என் கணவரையும் ஒன்று கூட்டி வைப்பது! உன்னைப் போன்ற உத்தம புத்திரனை எங்கு நான் காண்பேன்! இன்னும் சற்று நேரத்துக்குள் உன் மாளிகைக்கு பிரதானியரை அனுப்பி வைக்கிறேன்... இன்றிரவே புறப்படுங்கள்... என்ன தெரிந்ததா ?

இராஜ்ய: அப்படியே அண்ணி!

தயா: சென்றுவா. வெற்றியோடு திரும்பு !

(செல்லுகிருன் - விக்கிரமனும் செல்ல முற்படுகிருன்)

தயா: விக்கிரமா! நில்!

விக்ரம; அரசி! நானும் இராஜ்ய பிரகாசனுடன்...

தயா: இல்லை; உனக்கு வேறு வேலை இருக்கிறது; ராஜகுரு நாதர் காஷ்மீரம் வரை செல்ல நம்பகமான வீரனைத் தேடுகிருர்; உன்னைத் தவிர வேறு யாரை நம்புவது? ராஜகுருவைச் சென்று கண்டு பொறுப்பை ஏற்றுக்கொள்! (தயங்குவதைக் கண்டு) இம்... போ... (தயங்கித் தயங்கிப் போகிருன்)

தயா: (தனக்குள்) எவ்வளவு தொல்லைகள்! இந்த இரண்டு பேரையும் தொலைத்து விட்டால் வேறு எனக்கு எதிரிகளே கிடையாது; என் ஆட்சியைத் துண்டாட வேறு யாருமே கிடையாது! சுயம்புநாதா! உன் அடிமையை எவ்வாறெல்லாம் ஆண்டு கொள்கிருய் !

(கைதட்டுகின்ருள்; காவலர்கள் ஓடி வருகின்றனர்)

ஆறுபிரதானிகளுக்கு உடனே அவசர அழைப்பு விடுங்கள்!

(போதல்)

(தொடரும்)

சிவாகம ஸார ஹாரம்

ஆகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 21, இதழ் 4, பக்கம் 223இன் தொடர்ச்சி)

सिकतं तण्डुलं चान्नं
नदीमृद्गोमयं तथा ।
नवनीतं च रुद्राक्षं भस्म
चन्दन कूर्चकम् ॥
पुष्पमाला गुळं चैव
क्षणिकं द्वादशं भवेत् ।

—காரணாகமம்.

மணல். அரிசி, அன்னம், ஆற்று மண், கோமயம், வெண்ணே, ருத்ராக்ஷம், விபூதி, சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலே. வெல்லம் என்றுக்ஷணிகலிங்கம்பன்னிரண்டாம். இத்தகைய இலிங்கங்களில் நிஷ்கள வடிவுடையவராக விளங்கும் இறைவன் தியானம் பூஜை முதலியன செய்யவேண்டியதன் பொருட்டு சகளமூர்த்தியாகவும் சகள நிஷ்கள மூர்த்தியாகவும் காட்சியளிக்கிருன். சிவன் நிஷ்களன், முகலிங்கமூர்த்தி சகள நிஷ்கள மூர்த்தி; சந்திரசேகரர் முதலிய இருபத்துஐந்து மூர்த்திகள் சகளமூர்த்திகளாம், அதாவது சந்திரசேகரர், உமாமகேசர், விருஷபாருடர், நடராஜா, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர் காமதஹனர், யமசங்காரி, திருபுரசங்காரி, ஜலந்தரவதர், கஜாரி, வீரபத்ரர், ஹர்யர்த்தர், அர்த்தநாரீசர், கிராதர், கங்காளமூர்த்தி, சண்டேசானுக்ரஹர், விஷாபஹரணர், சக்ரப்ரதானர், விக்னப்ரசாதர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசனர், தக்ஷிணமூர்த்தி லிங்கோத்பவர் என்ற இருபத்தி ஐந்து மூர்த்திகளாவார்கள்.


இத்தகைய இலிங்கங்களுக்கு அளவு பயன் யாவும் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. பொதுவாக வீடுகளில் பன்னிரண்டு அங்குலத்திற்கு மேற்பட்ட இலிங்கத்தை வைத்துப் பூஜிக்கக்கூடாது.

பூஜை என்பது ஆன்மார்த்தம். பரார்த்தம் என இருவகைப்படும். தனது ஆன்ம நலனேக் குறித்துத் தன்ஞலேயே செய்யப்படும் பூஜை ஆன்மார்த்தபூஜை, ஆலயத்தில் ஆதிசைவர்களேக் கொண்டு உலகக்ஷேமத்தின் பொருட்டு செய்யப்படும் பூஜை

தருமையாதீனம் ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்
ஏழூர்த் திருவிழா-திருச்சோற்றுத்துறை



திருக்கண்டியூர்




ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்.
தஞ்சை அறநிலையங்களின் துணை ஆணையரும், மற்ற அன்பர்களும்

தருமையாதீனம் ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்
ஏழூர்த்திருவிழா - திருநெய்த்தானம்



திருப்பூந்துருத்தி



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்,
தஞ்சை அறநிலையங்களின் துணை ஆணையரும், மற்ற அன்பர்களும்

பரார்த்தபூஜை, இவ்விரு பூஜைகளும் நித்தியம், நைமித்தியம், காம்யம் என மூன்றுவிதம். தினம் தினம் செய்யப்படும் உஷ: கால பூஜை முதலிய பூஜைகள் நித்திய பூஜை எனப்படும். ஜீர்ணோத்தாரணம், அஷ்டபந்தனம், கும்பாபிஷேகம், உத்ஸவம், ப்ராயச்சித்தம், க்ரஹண பூஜை முதலியன நைமித்திய பூஜை எனப்படும். தனது இஷ்டசித்தியின் பொருட்டு செய்யப்படும் ஜன்ம நக்ஷத்திர கால பூஜை முதலியன காம்யமாகும். இவைகளின் முறைகள் யாவும் விஸ்தாரமாக ஆகமங்களில் நன்கு கூறப்படுகின்றன.

மனிதனுக்கு ஆலய தரிசனம் மிகவும் முக்கியம் இதைத் திருநாவுக்கரசர்,

திருநாமம் அஞ்செழுத்தும்
 சேப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால்
 பேசாராகில்
ஒருகாலுந் திருக்கோயில்
 சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்
 டுண்ணாராகில்
அருநோய்கள்கெட வெண்ணீ
 றணியாராகில்
அளியற்றார் பிறந்தவாறேதோ
 என்னிற்
பெருநோய்கள் மிகநலியப்
 பேயர்த்துஞ்
சேத்துப்பிறப்பதற்கே தோழிலாகி
 இறக்கின்றாரே.

— திருநாவுக்கரசர்

சிவபஞ்சாக்ஷரம், சிவ நாம கீர்த்தனம், சிவாலய தரிசன், சிவபூஜை முதலியவை மக்களுக்கு இன்றியமையாதன. ஆதலால் இவைகளை முறையோடு செய்யவேண்டும். சிவதரிசனம் செய்ய ஆலயத்திற்குச் செல்லுபவர்கள் கவனிக்கவேண்டிய தோஷங்களும்கூறப்படுகின்றன. அதாவது, தண்டாகாரமாக ஒரு தடவை நமஸ்காரம் செய்தல் தோஷம். இதுபோல் ஒரு பிரதக்ஷிணம் செய்தல், எச்சில் உமிழ்தல், சூதகத்துடன் ஆலயத்திற்குச் செல்லுதல், ஆலயத்துள் இருக்கும் மூர்த்திகளுக்குத் தனித்தனியாக நமஸ்கரித்தல், ஆலயத்தில் கால் அலம்புதல், ஆலயத்துள் கட்டிலில் உட்காருதல், படுத்துக்கொள்ளுதல், உணவு அருந்துதல், பொய் பேசுதல், சிரித்தல், விதண்டை பேசுதல், அழுதல், ஒருவருக்கொருவர் தழுவுதல், அடித்தல், வாழ்த்தல், இச்சையுடன் பெண்களுடன் பேசுதல், கம்பளியைப் போற்றிக் கொள்ளுதல், பிறரை நிந்தித்தல், நந்திக்கும் சங்கரருக்கும் நடுவில் போதல், தலையை ஆற்றுதல், இறைவனுக்கு நிவேதம் செய்யாமல் சாப்பிடுதல், சோம சூத்திரத்தைத்தாண்டுதல், குரு நிந்தை செய்தல், தாம்பூலம் போடுதல், அப்யங்கம் செய்துகொள்ளுதல், மலஜலம் கழித்தல் என்ற காரியங்களை அறவே ஒழிக்கவேண்டும். திரைபோட்டிருக்கும்போது சுவாமிதரிசனம் செய்யக்கூடாது.

अभिषेके च नैवेद्ये सोपचारे
तथैव च ।
प्रदक्षिण नमस्कारं जपं
ध्यानं च वर्जयेत् ॥

அபிஷேக காலத்திலும் நைவேத்திய காலத்திலும் அப்படியே. உபசாரகாலத்திலும் பிரகூஷிணம் நமஸ்காரம், ஜபம், தியானம் இவைகளைச் செய்யக்கூடாது. சரீரத்தைப் போற்றிக்கொண்டு நமஸ்காரம் செய்தால் ஏழு ஜன்மாவிற்குப் பொருள் அற்றவனாக ஆகிறான்.

புஷ்பத்தை எதிரில் போட்டு ஸாஷ்டாங்கமாகவோ பஞ்சாங்கமாகவோ நமஸ்காரம் செய்ய வேண்டும். பூர்ண கர்ப்பிணியானவள் எண்ணை நிறைந்த குடத்தை எடுத்துக்கொண்டு எப்படி நடப்பாளோ அவ்வாறு மெதுவாக மௌனமாக பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.

पूजया विपुलं राज्यं
अग्निकार्येण संपदम् ।
जपेन पापसंशुद्धिं ज्ञानं
ध्यानेन चाश्नुते ॥
किंतु देहावसानंतु यः
पूजयति भक्तितः ।
सशिवः सर्वकृत् यज्वा
जीवन्मुक्त स उच्यते ॥

—மிருகேந்திராகமம்.

பூஜையால் விஸ்தார ராஜ்யத்தையும், ஹோமத்தினால் ஐச்வரியத்தையும், ஜபத்தினால் பாப சுத்தியையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகிறான். சரீரமுள்ளவரையில் யாதொருவன் பக்தியுடன் சிவபூசை செய்கிறானோ அவனே சிவன். அவனே யாகசிலன். அவனே ஜீவன் முக்தனாகிறான் என்று மிருகேந்திரம் என்ற ஆகமம் கூறுகிறது. இதுபோன்ற பல விஷயங்கள் விஸ்தாரமாகக் கிரியாபாதத்தினால் அறியப்படுகிறது.

யோகபாதம், அஹிம்சை, சத்யம், திருடாமை, பிரும்மசரியம், தயை, நேர்மை, பொருமை, தைரியம், மித ஆகாரம், ஆசாரம் என்ற யமத்தின் லக்ஷணம், தவம், சந்தோஷம், ஆஸ்திகத்தன்மை, தானம், தேவ பூஜை, சித்தாந்தம் கேட்டல், லஜ்ஜை, புத்தி, ஜபம், ஹோமம் என்ற நியமங்களின் லக்ஷணம் மற்றும் பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி இவைகளின் லக்ஷணம் முதலியவைகளைக் கூறுகிறது.

சரியாபாதம் ப்ரபஞ்ச லக்ஷணம் கூறுமிடத்தில் ஜலத்தில் உண்டாகும்பிராணிகள் ஒன்பது லக்ஷம். ஸ்தாவரங்கள் இருபது லக்ஷம். புழுக்கள் பதினொரு லக்ஷம், பறவைகள் முப்பது லக்ஷம், பசுக்கள் பத்து லக்ஷம் மனுஷ்யர் நான்கு லக்ஷம் ஆக

எண்பத்திநான்கு லக்ஷம் ஜீவ ராசிகள் என்றுகூறி அவைகளின் லக்ஷணங்களையும் கூறுகிறது.

வேதம் சிவாகமம் இரண்டும் கடல் போன்றது. இறைவன் தத்புருஷம் அகோரம் வாம தேவம் சத்யோஜாதம் என்ற நான்கு முகத்தினின்றும், ருக் வேதம் யசுர்வேதம் சாமவேதம் அதர்வணவேதம் என்ற நான்கு வேதங்களையும் கூறி ஈசானமுகத்தினல் காமிகம் முதலிய ஆகமங்களைக் கூறினர். வேதம் மூன்று வருணத்தாருக்கும், சிவாகமம் நான்கு வருணத்தவருக்கும், உரியதுஎன்றும் கூறப்படுகிறது.

लोकास्समस्तास्सुखिनो भवन्तु ।

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil. Sirkali Taluk, Tanjore Dt.

I have got the good fortune of visiting this famous temple this 20th April 1962 and had a heartening puja. The management is superb, each and every corner is kept neat, clean and tidy, the persons incharge are very courteous. I am greatly indebted to them to give me the pleasure of their guidance and blessings.

(Sd) Madhusudandas,
Inspector,
Punjab National Bank Ltd., H. O. New Delhi.
20—4—62.

இந்த மகத்தான கோவிலை வெகு அழகாக நல்ல முறையில் நடத்திவருவதைப்பற்றி மகாசந்நிதானம் தருமபுரம் ஆதீன கர்த்தர் பண்டாரசந்நிதி அவர்களை மிகவும் பாராட்டுகிறேன்.

இந்தக்கோவிலில் உள்ள கட்டளை சுவாமிகள் அவர்களையும்' சூப்பரின்டெண்ட் சீனுவாச அய்யங்காரவர்களையும், மற்ற எல்லா உத்யோகஸ்தர்களையும், குருக்கள்களையும், மற்றகோவில் ஆட்கள் எல்லோரையும் ரொம்பவும் நல்லமுறையில் இந்த பெரியகோவிலை நடத்திவருவதற்காகப் பாராட்டுகிறேன்.

(ஒ-ம்.) மு. அ. முத்தையா செட்டியார்,
26—4—62.

தருமையாதீன வெளியீடுகள்

வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர்.

(மலர் 20, இதழ் 11, பக்கம் 672 இன் தொடர்ச்சி)

எண் 34. புள்ளிருக்குவேளூர்த் தேவாரம், திருப்புகழ், திருவருட்பா

வெளியிட்டோர் :- தருமையாதீனம் 24 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளத்தின்படி, வேளூர் தேவஸ்தாம் கட்டளை விசாரணை ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வெளியிடப்பெற்றது. 1941.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் ஒன்று, திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள் இரண்டு ஆக மூன்று தேவாரத் திருப்பதிகங்களையும், அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் ஆறையும், சிவஞானதேசிக சுவாமிகள் அருளிச்செய்த முத்துக்குமாரசாமி திருவருட்பா பத்தையும் உடையது இந்நூல். புள்ளிருக்குவேளூரைத் தரிசித்து அன்பர்கள் இத்தலத் திருப் பாடல்களை ஓதிப் பயனெய்தும் வண்ணம் வெளியிடப்பெற்றது இந்நூல்.

எண் 35. திருத்தொண்டத்தொகையும், அசபாநடனப் பதிகமும்

வெளியிட்டோர் :- தருமையாதீனம் 24 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணைப்படி வெளியிடப்பெற்றது.1941

சுந்தரமூர்த்தி சுவாமிகளால் அருளிச்செய்யப்பெற்றது இத் திருத்தொண்டத்தொகை. தென்திசை வாழவும் திருத்தொண் டத்தொகை பாடவுமே சுந்தரர் அவதாரம் செய்தார் என்று கூறல் மரபு. இது ஒன்றே திருத்தொண்டத்தொகையின் பெரு மையை விளக்குவதற்குப் போதுமானது. அசபாநடனப் பதிகம்

10 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் அருளிச் செய்யப் பெற்றது. அசபாநடனம் என்பது மூச்சுக்காற்று வெளிவரல் போலவும் உட்செல்வதுபோலவும் திருநடனம் ஆடும் ஆரூர்த் தியாகேசனைப்பற்றிய தோத்திரநூல் இது.

எண் 36. குங்குலியக்கலய நாயனர் அன்பின் திறம்

வெளியிட்டோர் :- தருமையாதீனம் 24 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணைப்படிவெளியிடப்பெற்றது. 1941

குங்குலியக்கலய நாயனர் திருக்கடவூர்ப் பெருமானுக்கு நாடோறும் தவருது குங்குலியத்தூபமிடும் திருப்பணியை வழுவாமல் செய்துவந்தவர். வறுமைவந்தபோதும் மனைவியின் திருமாங்கல்யத்தை விற்றுக் குங்குலியத்தூபமிட்டும் தம் சிவப் பணியைத் தவருமற் செய்து இறைவனல் நிறைந்த செல்வம் அருளப்பெற்றவர். திருப்பனந்தாளில் அன்புநாண் பூட்டி சாய்ந்திருந்த சிவலிங்கத்தை நிமிர்த்தி அன்பின் பெருமையை வெளிப்படுத்தியவர்.

எண் 37. திருக்கடவூர்த் தேவாரம் திருப்புகழ்

வெளியிட்டோர் :- தருமையாதீனம் 24 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணைப்படி, கட்டளை விசாரணை, ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் வெளி யிடப்பெற்றது. 1941.

திருஞானசம்பந்தசுவாமிகள் திருப்பதிகம் ஒன்று, திருநாவுக் கரசுசுவாமிகள் திருப்பதிகங்கள் இரண்டு, சுந்தரமூர்த்தி சுவாமி கள் திருப்பதிகம் ஒன்று ஆக நான்கு தேவாரத் திருப்பதிகங் களையும், அருணகிரிநாதர் அருளிச்செய்த இரண்டு திருப்புகழ் களையும் உடையது. அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்ருக, காலனை சம்கரித்த தலமாக விளங்கும் இத்தலத்தைத் தரிசிப்போர் ஓதிப் பயனெய்த உதவுவது இந்நூல்.

எண் 38. திருவையாற்றுத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ்

வெளியிட்டோர் :- தருமையாதீனம் 24 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி வெளியிடப்பெற்றது. 1941.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள் ஐந்து, திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள் பதின்மூன்று, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் ஒன்று, திருவாசகம் ஒன்று, திருப்புகழ் இரண்டு. இவ்வாறு இத்தலத் திருப்பதிகங்களை ஓதிப் பயனுறும்வண்ணம் வெளியிடப்பெற்றது இந்நூல்.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Tirubuvanam

It was a wonderful opportunity for me to see the beautiful sculpture. Especially Surabeswarar which is nowhere found is so thrilling and workmanship unrivalled - This shows what is south and how the Rajas of Chola were so much God fearing and how they took care of the Art is to. May the blessings of Him be to all.

(Sd.) G. Srinivasan,
Deputy Branch Manager,
Brook Bond India (P) Ltd., Trichinapally.
16—4—62.

மதிப்புரை :

வித்துவான் தேர்வு வினாவிடை - எண் 1

(தொல்காப்பிய எழுத்ததிகாரம்)

ஆசிரியர் :- வித்துவான், திரு. தா. ம. வெள்ளைவாரணனார், தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள். விலை ரூ. 1—25. பக்கங்கள் 104. இதன் ஆசிரியர் பல்லாண்டுகளாகத் தமிழ்க்கல்லூரியில் பாடம் பயிற்றிவரும் அநுபவ அறிவு விளங்குமாறு இந்நூலை எழுதியுள்ளார். தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணர் உரைக்குச் சீரிய வினாவிடை முறையில் விளக்கம் தந்துள்ளார். அரசினர் தேர்வுகளில் கேட்கப்பட்ட ஆராய்ச்சி வினாக்கள் பலவற்றுக்கும் நல்லமுறையில் விடை தயாரித்துள்ளார். வித்துவான் வகுப்பில் பயிலும் அனைவர்க்கும் இது நல்ல துணையாக இருக்கும் என்பது உறுதி. வேண்டுவோர் ஆசிரியர்க்கு எழுதிப் பெறலாம். — " வேலன் "

திருக்குறளும், கம்பராமாயணமும்

வித்துவான், திரு. M. S. துரைசாமிப் பிள்ளை.

(மலர் 21, இதழ் 4, பக்கம் 236 இன் தொடர்ச்சி

" நகை[2]யுள்ளும் இன்[3]னாது
இகழ்[1]ச்சி பகையு[2]ள்ளும்
பண்[3]புள பா[1]டறிவார்
மாட்டு " — குறள் 5.

உலக வழக்கினையறிந்த பண்புடையார் பகைவரிடத்திலும், இன்பந்தரும் இனிய செயல்களையே செய்வார்கள்.

[1] தன்னைப் பிறர் இகழ்தல் தனக்கு இன்னாது ஆதல் போலத் தான் பிறரை இகழினும் அது அவர்க்கு இன்னாதாகும் என்னும் இயல்பையறிதல்.

[2] பிறர் இயல்பு அறிந்து ஒழுகுவார்மாட்டு பகையுள்ள வழியும், இகழ்தல் உண்டாகாது. இனிய பண்புகளே உண்டாகும்.

கம்பர்:- இராமன் இலங்கையை அடைந்தான். வடக்கு வாயிலை முற்றுகையிட்டான். அங்கதனைத் தூதுவிட்டான். அறவுரைகள் பல கேட்டான். எனினும் இராமன் சொல்வழி நிற்கமாட்டாத (இராவணன் முதல் நாள் தன்னுடைய மிகப் பெரிய சேனைகளுடன் இராமனிடம் போர் செய்தான். அப்போர் மிக்க கடுமையாக நடந்தது. எனினும் முடிவில் இராவணன் சேனைகளையும், ஆயுதங்களையும் இழந்து தனியனாய் நின்றான். நின்றதோடமையாது,

" குன்றின் அனையாரும்
குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய
செயின் "

என்னும் குறள்மொழிக்கிணங்க மகா அபராதியான அவ்விராவணன் குன்றி நாணத்தோடு தலை குனிந்து நின்றான். அதைக் கண்ட இராமன் (உணவில் விஷமிட்டவன், வீட்டைக் கொளுத்தினவன், தாயபாகம் கொடாதவன், தாரத்தை அபகரித்தவன், போன்றவர்கள் மாபாவிகள் என்றும், ஆததாயிகள் என்றும் நூல்கள் கூறும். மேலும் இவர்களைக் கண்ட போதே கொல்லலாம்; கொன்றால் தோஷமில்லை என்பதும் பிரமாணம்). ஆகையால் இப்போது உன்னைச் சுலபமாகக் கொன்று

விடலாம். எனினும் நிராயுத னிடம் சண்டை செய்யலாகாது என்பது போர்முறை ஆகையால் இப்போது நீ உன் இருப்பிடஞ் சென்று இரவு நன்கு யோசித்து உன் முடிவு எப்படியோ அதை நிச்சயம் செய்துகொண்டு நாளை வா என்னும் கருத்தை வெளியிட்டான்.

" ஆளையாவுனக் கமைந்தன
வெல்லாம மாருதமறைந்த
பூளையாயின கண்டனையின்று
போய்ப் போர்க்கு
நாளைவாவென நல்கினனு
கிளங்கமுகின்
வாளைதாவுறு கோசல
நாடுடை வள்ளல் "

எதிரில் எல்லாவற்றையும் இழந்து ஏதிலன்போல நிற்கும் இராவணு நினக்கு எல்லாம் அமைந்துள்ளன. எனினும் இன்று பெருங்காற்றிலலைக்கப் பட்ட குவளைப் புஷ்பத்தைப் போல இராமபாணமென்னும் பெருங்காற்ருல் நின் சேனைகளாகிய குவளை மலர்கள் அலைக் கழிக்கப்பட்டன. இதை நேரில் பார்த்தாய். ஆகையால் இரவு சென்று இருக்கையில் தங்கி அறிவுடைய பெருமக்களுடன் கலந்தாலோசித்து சண்டையோ அல்லது சமாதானமோ இரண்டில் எதையும் செய்யலாம். நாளை வா என்ருன் உயிர் கொடுத்த வள்ளல். இதனுல் இராமனின் சத்தியநெறியும் அறநெறி தவரு ஆண்மையும் நன்கு விளங்கும்.

" பண்புடையார்ப் பட்டுண்டு
உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது
மன். " —குறள் 6

பண்புடையாரது உயர்ந்த நல்ல குணங்கள், உலகத்திற்கு நல்ல பயனைத் தருதலால் உலக இயற்கை நிலைத்து :நிற்கின்றது. இல்லையேல் மண்ணில் மறைந்து மாயும்.

அசுரர்களும் மற்ற அரக்கர்களும், தங்கள் வர பலத்தால், கொடுமைகளைச் செய்து தேவர்களையும், தவசிகளையும் கொன்று தீமை விளைவித்தனர். அதருமங்கள் மலிந்து மிக்க துன்பத்திலாழ்ந்து உலகம் இடர்ப்பட்டது. அக்கொடுமைகளுக்குக் காரணமான அரக்கர்களை யொழித்து உலகத்தை நல்ல நிலையில் நிறுத்த திருமால் தானே தசரதன் மகனுக அவதரித்து தருமத்தை நிறுத்தினுன் :-

" மசரதமனையவர் வரமும்
வாழ்வுமோர்
நிசரத கணைகளால்
நீறு செய்யயாம்
கசரத துரகமாக் கடல்
கோள் காவலன்
தசரதன் மதலையா
வருதும் தாரணி "

என்று சங்கல்பம் செய்துகொண்டு. கோமுறை தவரு தசரதன் மகனுய்ப்பிறந்து தரணியைத் தாங்கினுன் என்னும் சரிதம் உன்னி உன்னி இன்புறத்தக்கது.

பண்புடையார் சார்பு இல்லா விட்டால் உலகம் அழியும்.

“ அறம்போலும் கூர்மைய
ரேனும் மரம்போல்வர்
மக்கள் பண்பில்லா தவர் ”

— குறள் 7

பண்பற்றவர் கூர்மையான அறிவுடையரேனும் ஓரறிவுடையமரத்திற்குச் சமானமாவர்.

I அரம் தன்னைச் சார்ந்த பொருள்களை அராவி. அராவி உருவில்லாமல் மாயச்செய்யும். கூர்மையான அறிவு, பிறரைப் பழிப்பதற்காகத் தம் கூர்மையைப் பயன்படுத்திக் கொள்வானே அன்றி மரத்தினுல் ஏற்படும் பயனும் ஏற்படாது (ஆகையால் இவர்கள் மரத்தினும் தாழ்மையானவர்).

இராவணன் இராமனிடம் முதல்நாள் சண்டையில் தோல்வியுற்றுத் தனியனுய் நின்ருன். அஷ்டதிக் கஜங்களையும் வென்ற ஆண்மையையுடையவன். கைலாயத்தை எடுத்த மிக்க பலமுடையவன். நாதமுனிவருடைய சொல்லுக்கிரங்கி இசைபாடிய இணையிலா வீரன். நவ வியாகரணம் கரைகண்ட மேதை. மிக்க அறிவினை உடையவன். இவை எல்லாம் ஒருங்கு சேர்ந்திருந்தும் மிக்கவர்போற்றும் பண்புடைமை என்பது ஒன்று இல்லாமையால் இவையனைத்தும் பாழாகி வெட்கமடைந்து ஒருவரும் அறியாமல் தன்னிடம்சேர்ந்தான் என்பதைக் கம்பர்,

“ வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மௌலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையோடு இலங்கை
புக்கான் ”

இராவணன் தன் பெருமைகளை இழந்து இரவுக்காலத்தில் ஒருவரும் அறியாவண்ணம் தன் மனை சேர்ந்தான் என்பதைக் அழகாக அமைத்துள்ளார்,

“ நண்பு ஆற்ருர் ஆகி
நயமில செய்வார்க்கும்
பண்பாற்ருர் ஆதல் கடை ”

— குறள் 8

நட்பினைச் செய்யாது பகைமையைச் செய்து ஒழுகுவார்மாட்டும், தாம் பண்புடையராய் ஒழுகாமை அறிவுடையார்க்கு இழுக்காம். கம்பர்,

“ பிறந்தநாள் தொடங்கி யாரும்
துலைபுக்க பெரியோன்பெற்றி
மறந்த நாளுண்டோ? என்னைச்
சரணென்று வாழ்கின்ருனைத்
துறந்த நாட்கின்று வந்து
துன்னிஞன் சூட்சியாலே
இறந்த நாளன்ரே என்றும்
இருந்த நாளாவதென்ருன் ”

இராவணன் தம்பி விபீடணன் இராமனிடம் அடைக்கலமடைந்தான். அவனைக் கொள்வதா? அல்லது தள்ளுவதா ? என்னும்

கேள்விக்கு வானரத் தலைவர்கள் பலவாறு சொல்லி அவனைச் சேர்த்துக்கொள்ளல் ஆகாது என்றனர். அதைக்கேட்ட இராமன் சிபியின் கதையைச் சொல்லி விபீடணன் சூட்சியால் நான் இறந்த நாளே என்றும் இருந்த நாளாக உலகம் கொண்டாடும் ஆதலின் அவனைச் சேர்த்துக் கொள்வதே நம் கடமை என்று பகைவரிடத்தும் நண்பு பாராட்டும் பெருந்தகைமை இராமனிடம் இருப்பது கவனிக்கற்பாலது.

"நகல்வல்லர் அல்லார்க்கு
மாயிருஞாலம்
பகலும்பால் பட்டன்று இருள்'

— குறள் 9

எல்லாரோடும் கலந்து அறியப் பெருமையின் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாதென்பதை உலகம் அவர்களுக்கு இருட்டு என்றார்) இராமன; தம்பியும் சீதையும் இனிதிருக்க பஞ்சவடியில் தங்கியிருந்தான். சூர்ப்பனகை அங்கு வந்து இராமனைப் பார்த்தாள். தகாதன சொல்லி இளையவனால் தண்டனை பெறுகிறாள். தண்டனைபெற்ற அவள் இராவணனிடம் சென்று சீதையின் உடல் நலத்தை அவன் உளங்கொள வருணிக்கின்றாள். அவ்வருணனையைக் கேட்ட இராவணனுக்குப் பகல் காலத்திலேயே கண் தெரியாமல் இருட்டில் இடர்ப்படுபவன் போல சீதையால் கொண்ட ஆசைக்கு அடிமையாகி தங்கை சூர்ப்பணகையை சபையில் சீதையாகக் கருதுகிறான் என்பதை

"பொய்ந்நின்ற நெஞ்சில்
கொடியாள் புகுந்தாளை
நோக்கிட
நெய்ந்நின்ற கூர்வாள் அவன்
நேர்உற நோக்கி நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயில்
நின்றெனை வந்தேன் முன்னர்
இந்நின்ற வணங்கோல்
இயம்பிய சீதை என்றான்."

—கம்பர்

சூர்ப்பணகை இராமனையே நினைந்து நினைந்து உருகி இராவணனை இராமனாக எண்ணுகிறாள்.

"செந்தாமரைக் கண்ணொடும்
செங்கனி வாயினொடும்
சந்தார்தடந் தோளோடும்
தாழ்தடக்கை களோடும்
அந்தாரகலத் தோடும்
அஞ்சனக் குன்றமன்ன
வந்தானிவனாகும் அவ்வல்வில்
இராமன் என்றாள்.''

பண்புடைமை யில்லாமையால் மாபெரும் சபையில் பகல் காலத்திலேயே இராவணன் சூர்ப்பணகையைச் சீதையாகக் கருதுவதும், சூர்ப்பணகை இராவணனை இராமனாகக் கருதுவதும் கண்தெரியாமையை கவி அழகுற எடுத்துக்காட்டியுள்ளார்.

" பண்பிலான் பெற்ற பெருஞ்
செல்வம் நன்பால்
கலந்தீமையால்
திரிந்தற்று " -குறள் 10.

பெற்ற செல்வத்தைக்கொண்டு தான் பயன் அடைவதற்கு உரிய நற்குணத்தை யடையாத ஒருவனது செல்வம், மிகப் பெரியதாயிருந்தாலும், பண்பில்லாமை என்னும் குற்றமுடைய அவனுக்கும் நன்மையைத் தராது அப்பொருள் பிறர்க்கும் பயன்படாமல் அழிந்துபோகும்.

" முக்கோடி வாழ் நாளும்
முயன்றுடைய பெருந்தவமும்
முதல்வன் முன்னாள்
எக்கோடியாராலும்வெல்லப்படா
வெனக்கொடுத்தவரமும்ஏனை
திக்கோடும் உலகனைத்தும்
செருக்கடந்த புயவலியும்
தின்று மார்பில்
புக்கோடி உயிர்பருகிப்புறம்
போயிற்று இராகவன்தன்
புனிதவாளி " —கம்பர்.

இராமனது பாணத்தால் இராவணன் மடிந்தான், என்பதைக் கேட்ட அவன் மனைவி மந்தோதரி போர்க்களத்தில் தன் கணவனைப் பார்த்தும் புலம்புவதாக அமைந்தது இப்பாட்டு. மூன்று கோடி ஆயுளும் முயற்சியினால் பெற்ற பெருந்தவமும் அத்தவத்தால் பெற்ற அரிய பெரிய வரங்களும் உலகத்தில் எதிரில்லாத மிக்க வெற்றியும், இவையனைத்தும் இராமனுடைய புனிதமான அம்பு விழுங்கிவிட்டது என்று அழுதாள். எனவே முக்கியமாக இருக்கவேண்டிய பண்புடைமை ஒன்று இல்லாமையால் ஏனைய இருந்தும் ஒரு சிறிய பயனும் ஏற்படாமல் அனைத்தும் பாழாயின என்பதைக் கம்பர் வெகு அழகாகக் காட்டியுள்ளார்.

இதுகாறும் கூறுயவாற்றான் திருக்குறளுக்கும் கம்பராமாயணத்திற்கும் உள்ள ஒற்றுமை நயத்தைக்கண்டோம்.

கம்பர் திருக்குறளை எப்படிப் படித்திருப்பார் என்பதை ஒருவாறு இக்கட்டுரை முகத்தானறியலாம். எனவே திருக்குறளைத் திறம்பட படித்த பெருமையைத் தன் அழியாக் காப்பியத்தில் அமைத்து ஆங்காங்கே நல்ல பாத்திரங்கள் மூலமாக அக்கருத்துக்களை வெளிப்படுத்திக் குறளின் மாட்சியை மக்களுக்கு நன்குஎடுத்துக்காட்டும்பெருமை கம்பர் ஒருவர்க்கே தெரியும் என்றால் மிகையாகாது.

இப்படியே பல திருக்குறட் பாக்களை இராமாயணத்துடன் ஒப்பிட்டுக்காட்டலாம். அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து உணர்வார்கள் என்னும் நம்பிக்கையால் ஓரதிகாரத்தை எடுத்துக் காட்டவேண்டிய அவசியமாயிற்று.

திருமுறையும் கல்வெட்டும்

கல்வெட்டாராய்ச்சிக்கலைஞர்,
வித்துவான். வை. சுந்தரேச வாண்டையார்

(மலர் 21, இதழ் 5, பக்கம் 278 இன் தொடர்ச்சி)

நம் சமயக் குரவர்கள் எந்த ஊரில் வழிபாடு ஆற்றினர்களோ அவ்வூரைச் சுட்டி நம்பிரானது திருப்பெயரைக் குறித்துள்ளனர். அம் முறையைப் பின்பற்றியே சமய குரவர்கள் காலத்துக்குப் பிற்பட்டு அரசர்களால்ஒவ்வோர் கோயில்களிலும் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கிளில் அவ்வூரினைக் குறித்து சிவபிரானது திருப்பெயரைக் குறித்துள்ளார்கள். இம்முறையே திருச்சிற்றேமம் என்னும் ஊரின் பெயரால் திருப்பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. எனவே இதுவே திருச்சிற்றேமம் ஆகும். இதனை யாரும் மறுப்பதற்கில்லை.

துலைப்பொன்

* இடங்கழிநாயனர் புராணத்தில்,

'' மன்னியபொன் னம்பலத்து
மணிமுகட்டில்
பாக்கொங்கின்
பன்னுதுலைப் பசும்பொன்னற்
பயில்பிழம்பா
மிசையணிந்த
பொன்னெடுந்தோ ளாதித்தன்
புகழ்மரபிற்
குடிமுதலோர் ''

என்னும் மூன்றும் செய்யுட்பகுதியில் துலைப்பசும்பொன் என்ற தொடர் உள்ளது. அது துளைப் பசும்பொன் என்றிருக்கவேண்டும். இதைத் துலைப்பசும்பொன் என்றது ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழையாகும். அதைத் துலைப்பசும்பொன் என்று கொண்டே பலர் வலிந்து பொருள் எழுதியுள்ளனர். திருச்சிராப்பள்ளி ஜில்லா திருச்செந்துறை என்னும் ஊரிலுள்ள முதற்பராந்தக சோழனின் மூன்றும் ஆண்டில் செதுக்கப்பட்ட கல்வெட்டில் ''சோழப்பெருமான் அடிகள் மகனர் அரிகுலகேசரியார் தேவியார், தென்னவன் இளங்கோவேளார் மகளார், பூதி ஆதிச்சபிடாரியார், பிரமதேயம்

---

* சைவ சித்தாந்த சமாஜப் பதிப்பு.

ஈசான மங்கலத்து திருச்செந் துறை, தாம் எடுப்பிச்ச கற்றளி பெருமானடிகளுக்கு, சென்னடை திருவமுதுக்கு, முதலாக, கொடுத்த விடேல் விடுகு கல் லால் துளைப்பொன் அறுபதின் கழஞ்சு" (S. I. I. Vol. III Part III No. 96) என்னும் கல் வெட்டுப் பகுதியும், வேற்றூர் களில் உள்ள கல்வெட்டுப் பகுதி களிலும் துளைப்பொன் ஒன்றே இத்தொடர் குறிக்கப்பெற்றுள் ளது. துளைப்பொன் இன்னது என்பதை "சுட்டு வெட்டிச் சூடுக்கு தந்து காச்சாற்றிக் கை செல்வது கழஞ்சிற்பேர்த்த துளைப்பொன் உரையும் துளை யும் வழுவாதது நகரக்கல்லால்... பொன் (S. I. I. Vol. III Part III Page 229 : Foot note) என்னும் கல்வெட்டுப் பகுதியால், அது மாற்றுயர்ந்த பொன் என்றும், அதற்கு அடையாளமாக அப் பொன்னில் துளையிடப்பெற் றிருக்கும் என்றும் புலப்படு கிறது. இந்திய நாணயங்களை ஆராய்ந்த டாக்டர் கன்னிங்காம் என்பவரும் இவ்வாறே குறித் துள்ளனர். எனவே இடங்கழி நாயனர் புராணத்தில் குறிக்கப் பெற்றுள்ள துலைப்பொன் என்பது ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழை என்பதும் அது துளைப்பொன் என்றே இருக்க வேண்டுமென்பதைக் கல்வெட் டுக்கள் விளக்கத்துடன் தெரிவிக் கின்றன என்பதும் பெற்றும்.

முடிப்புரை

எனவே இக்கல்வெட்டு ஆராய்ச்சியால் சைவ நூல் களில் விளங்காது கிடக்கும் இவைபோன்ற பல செய்திகள் ஐயமறவெளிப்படும் என்பது திண்ணம். ஆகையால் சைவத் தின் ஆக்கங்கருதும் அன்பர்கள் பலரும் கல்வெட்டு ஆராய்ச்சி யில் முனைந்து பயிலுதல் சைவ உலகிற்குப் பேருதவி செய்ய ஏதுவாகும்.

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்.

கொற்றவர் பகைகொண்டாலுங் கொடியவர் பகைகொண்டாலும்
மற்றவர் பகைகொண்டாலும் அமைச்சர்கள் பகைகொண்டாலும்
உற்றவர் பகைகொண்டாலு ஊரெலாம் பகைகொண்டாலும்
கற்றவர் பகையைமட்டுங் கனவினுங் கொளவொண்ணுதே.

அப்பர் அருந்தமிழ்

கயப்பாக்கம். திரு. சோமசுந்தரம் செட்டியார்

திருச்சிற்றம்பலம்

"திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ"
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய வொண்ணுமை யுணராதேன்.

திருச்சிற்றம்பலம்

இச்சொற்ருெடர் நம்பியாண்டார் நம்பிகள் திருவாய்மலர்ந் தருளிய திருத்தொண்டர் திருவந்தாதித் தொடரில் திருநாவுக் கரசு நாயனுருக்கு அருளியுள்ள இரண்டு திருப்பாட்டுக்களுள் இரண்டாவது திருப்பாட்டின் ஈற்றடியில் உள்ள இறுதித் தொடராகும்.

முதலில் அப்பர் சுவாமிகளைப்பற்றிச் சிறிது தெரிந்துகொண்டு பிறகு அவர் அருளிய அருந்தமிழைப்பற்றிப் பேசலாம் என்று எண்ணுகிறேன். அவையடக்கமாக ஒரு செய்யுளைக் கூறுகிறேன். இதனை ஒரு நண்பர் பாடியுள்ளார்,

"நாவுக்கரசர் நவின்ற திருவருளின்
பாவுக் கரசேங்கே பாவியேன்—கூவுக்
கணுகாத பெம்மான் அருளேங்கே எங்கே
நுணுகாத என்னறிவின் நோக்கு"

இருப்பினும் ஒருவாறு துணிந்து இறைவன் என் உண்ணின் றுணர்த்த உணர்ந்ததைச் சொல்லுவேன். தேசமெல்லாம் புகழ்ந் தாடும் கச்சித்திருவேகம்பப் பெருமான் கொண்டருளும் பங்குனி உத்திரப் பெருவிழாவில் "கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக்கோட்டி கொங்கையிணை யமர்வாருது கோலங்கொண்ட

குறிப்பு :- காஞ்சீபுரம் மெய்கண்டார் கழகத்தின் ஆதரவில் 22—3—62 அன்று நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

தழும்புளவே '' என்று நாவுக்கரசர் இத்தல ஐதிகத்தைத் திருவதிகை வீரட்டானம் தேவாரம் ஒன்றில் அருளியுள்ளது இத்தலத்தின் சிறப்பைக் குறிக்கும். இதுமட்டுமா ? கயிலையைத் தூக்கமுயன்ற இராவணனை இறைவன் தன் திருவடியின் திருவிரலொன்றினால் சிறிது அழுத்த அவனும் அம்மலையின்கீழ் நசுக்குண்டு '' அகம்பழத்துருவமானுன் அவளிவணல்லூராரே '' அதுகாலை அவன் வலிபொறுக்காமல் அரற்றினனல்லவா ? என்னென்று அரற்றினன் என்று அப்பர் சுவாமிகள் தம் திருக்குறுந்தொகைப் பாட்டொன்றிலும் பின்வருமாறு விதந்தோதியுள்ளதும் இத்தலத்தின் சிறப்பைக் குறிக்குமன்றோ ?

'' இலங்கை வேந்தன் இராவணன் சென்றுதன்
விலங்க லையெடுக் கவ்விரல் ஊன்றலும்
கலங்கிக் கச்சியே கம்பவோ என்றலும்
நலங்கோள் செலவளித் தானெங்கள் நாதனே ''

இனி, அப்பர் சுவாமிகள் வரலாறு தெரியாதவர் ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அப்படி இருந்தால் அவர் சைவராக இருக்கமாட்டார் என்பது உண்மை. ஏன் ? அப்பர்சுவாமிகளை முதன்முதல் அப்பூதியடிகளார் காண நேர்ந்த போது அவர் கேட்டதாகச் தெய்வச் சேக்கிழார்பெருமான் அருளியுள்ளதே சான்று.

'' போங்குகடல் கல்மிதப்பில் போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே
மங்கலமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர் நீர்தாம்யார் இயம்புமென இயம்பினர் ''

இருப்பினும் அப்பர் சுவாமிகள் வரலாற்றைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் 429 செய்யுட்களால்விரித்துரைத்துள்ளதைக் காண்க. அது இயலாதெனின், திருத்தொண்டர் புராண சாரத்தில் ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளியுள்ள இரண்டு செய்யுட்களையும் படித்தாலே அம்மூர்த்திகளின் வரலாறு முற்றும் அறியக்கூடும்.

'' போற்றுதிரு வாமுரில் வேளாண் தொன்மைப்
போருவில் கோறுக்கை யரதிபர் புகழனர்பால்
மாற்றருமன் பினில் திலகவதியாம் மாது
வந்துதித்த பின்பு மரு ணீக்கியாருந்

தோற்றி யமண் சமயமுறு துயரம் நீங்கத்
துணைவர் அருள்தர வந்த சூலை நோயால்
பாற்றருநீ ளிடரேய்திப் பாடலிபுத் திரத்தில்
பாழி யொழித் தரனதிகைப் பதியில் வந்தார் ".

" வந்துதமக் கையரருளால் நீறுசாததி
வண்தமிழால் நோய் தீர்ந்து வாக்கின் மன்னய்
வெந்தபொடி-விடம்-வேழம்-வேலை நீந்தி
வியன்சூலம் கொடியிடபம் விளங்கச்சாத்தி
அந்தமிலப் பூதிமகன் அரவு மாற்றி
அருட்காசு பெற்று மறையடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றில் கயிலைகண்டு
பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தினரே ".

இனி இத்தகைய சுவாமிகள் அருள்செய்த அருந்தமிழைப் பற்றிப் பார்க்கலாம்.

சைவர்கள் பிரமாண நூல் தமிழ் வேதம். இது 12 திருமுறைகள் கொண்டு விளங்கும். புறஇருளை 12 சூரியர் போக்குவது போல உயிர்களது அகவிருளை ஓட்டுந்தன்மையவை நம் 12 திருமுறைகள் என்பர் அறிஞர். இவற்றுள் முதல் ஏழு திருமுறைகளையும் அடங்கன்முறை என்றும், தேவாரம் என்றும் வழங்குவதுண்டு. இருப்பினும் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த - நமக்குத் தற்போது கிடைத்துள்ள முதல் மூன்று திருமுறைப் பாடல்களைத் திருக்கடைக்காப்பு என்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த - நமக்குக் கிடைத்துள்ள அடுத்த மூன்று திருமுறைப் பாடல்களைத் தேவாரம் என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த - நமக்குக்கிடைத்துள்ள ஏழாந் திருமுறைப் பாடல்களைத் திருப்பாட்டு என்றும் முன்னர் நம் முன்னோர் வழங்கிவந்தனர் என்பர், இவற்றுள் தேவாரம் எனச் சிறப்புப்பெயர் பெற்றவை அப்பர் அருந்தமிழே! என்று கூறி மேற்செல்வேன். (தொடரும்)

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்.

வறுமையை விளைத்திடாது வாதத்தை விளைத்திடாது
சிறுமையை விளைத்திடாது சேதத்தை விளைத்திடாது
மறுமையை விளைத்திடாது வஞ்சத்தை விளைத்திடாது
பொறுமையை விளைத்திட்டோமேற் பொய்மையும் விளைந்திடாதே

மணக்குடி மகாகும்பாபிஷேகத் திருநாளில் அளித்தது

வரவேற்புரை

மணக்குடி சைவப்பெருங்குடிமக்கள் சார்பில்

M. S. இராமலிங்கம் பிள்ளை வாசித்தளித்தது

இமயம் முதல் குமரி வரை இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபடும் இடம் திருக்கோயில். ஆலய வழிபாடு மக்களின் ஆன்மீக வளர்ச்சியையும், பண்பாட்டையும், ஒற்றுமையையும் உருவாக்கி இந்திய நாட்டின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டி வருகிறது.

கோயில் இல்லாத ஊரில் குடியிருத்தல் கூடாது என்பது நம் நாட்டுப் பழமொழி. சின்னஞ்சிறு கிராமமாக இருந்தாலும் பிள்ளையார் கோயிலாவது இருக்கும். இச்சிறப்பைச் சிறப்பாகத் தென்னாட்டில் காணலாம். தென்னாட்டின் காவிரிக்கரையின் வட கரையிலும், தென்கரையிலுமாக அமைந்த திருக்கோயில்கள் எண்ணற்றவை. அவற்றுள் காவிரியின் வடகரையில் மாயூரத் திற்குக் கிழக்கே இரண்டுமைல் அளவில் விளங்குவது மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரர் ஆலயம்.

பார்வதிதேவியார் இறைவனை மணந்து திருமணக்கோலத் தோடு எழுந்தருளிய பெருமைக்குரியது மணக்குடி. காவிரியின் கரையில் தருமையின் ஈசானதிசையிலே அமைந்து விளங்குவதும் இவ்வூரின் தனிச் சிறப்பாகும்.

இவ்வூரில் உள்ள ஸ்ரீ நல்லதாயார் அம்மன், பொறையான் திருக்கோயில்கள் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கானமக்கள் வந்து வழிபட்டுக் காணிக்கைச் செலுத்தும் சிறப்புடையன.

மணக்குடியில் வாழும் சைவப் பழங்குடி மக்களே தருமை யாதீனத்திற்கு முதன்மைச் சீடர்களாய் விளங்கும் பெருமை யுடையவர்கள். தொன்றுதொட்டுச் சைவப்பெருங்குடியில் பிறந்த எங்கட்குச் சமயதீட்சை முதலியன செய்வித்து, ஞானோபதேசம் செய்யும் குருமூர்த்திகளாய் விளங்குபவர்கள் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களே யாவார்கள்.

இத்தகைய எங்கள் குலதெய்வமாகவும் குருநாதனுகவும் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் இவ் வூருக்கு எழுந்தருளிய சிறப்பால் எற்றைக்கும் திருவருள் நெறி நிற்கும் பெருவாழ்வு பெற்றேம். எங்கள் குருநாதனுய் இன்று எழுந்தருளி அருளாட்சி செய்யும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் மகாகயிலாய யாத்திரை செய்த பெருஞ் சிறப்புக்குரியவர்கள். திருமடத்தைச் சார்ந்த திருக்கோயில்கள் பலவற்றைப் புதுக்கியும், திருப்பணி செய்வித்தும், அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்வித்தருளிய சிவபுண்ணியம் வாய்க்கப் பெற்றவர்கள். பொன்னுலும், மணியாலும், வெள்ளியாலும் இவர்கள் செய்வித்தருளிய திருவாபரணங்கள், அங்கிகள், மஞ்சங்கள், கொடிமரங்கள் எண்ணற்றவை. நித்தியநைமித்திக வழிபாடு, கோடி தொடங்கி அஷ்டோத்திரம் வரையிலுள்ள அருச்சனைகள் முதலியவற்றைச் செய்வித்துத் தூய்மையோடும் அழகோடும் திருக்கோயில்களைப் பரிபாலித்துவரும் இவர்க ளுடைய ஆட்சிக்காலம் தருமையாதீன வரலாற்றிலேயே ஒரு பொற்காலமாக விளங்குகிறது. கயிலைகண்டு கனகாபிஷேகங் கொண்டருளிய இக்குருமூர்த்திகளின் ஆட்சிக்காலத்தில் எங்கள் ஊர் ஸ்ரீ சுந்தரேசுவரர் ஆலயம் மிக்க சீரும் சிறப்புமாகப் புதிய மண்டபங்கள், சுதைச்சிற்பங்கள் முதலியவற்றேடு திருப்பணிகள் செய்யப்பெற்று அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற் றிருக்கிறது.

மணக்குடியில் வாழும் நாங்கள் அனைவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிக்கமலங்கட்கு நன்றியுடன் பாராட்டுரையைச் சமர்ப்பித்துக்கொள்கிறேம். வாழ்க தருமைத் திருமடம் வாழ்க கயிலைக் குருமணி. வளர்க சைவச்செந்நெறி.

தேவை

தருமபுர ஆதீனம் வேத சிவாகம பாடசாலையில் வேதபாகம் பாடம் நடத்த அதற்குத் தகுதியுள்ள உபாத்தியார் தேவை. விண்ணப்பம் அனுப்பி மற்றைய விபரங்களை நேரில்வந்து தெரிந்துகொள்ளவும்.

ஆதீனம் மானேஜர்

தருமபுரம். மாயூரம் P. O. 9—5—62

உ

தருமபுரம் ஆதீனம் இராஜன்கட்டளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானம், திருவாரூர்.

இராஜன்கட்டளையிலிருந்து ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்திற்குச் செய்யப்படும்

திட்டம் விபரம்

	நித்தியபடி			ஷூ 1-க்கு திட்டம்		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
நித்தியப்படி நாள் 1க்கு திட்டம் ...	40	11	6	14903	1	0
ஸ்ரீ தெக்ஷணாமூர்த்தி சுவாமிக்கு நித்தியபடி திட்டம் ...	1	6	3	508	15	6
ஸ்ரீ தெக்ஷணாமூர்த்தி சுவாமிக்கு சோமவாரம் நாள் 1க்கு திட்டம் ...	0	14	6	47	2	0
வார ஏறுபடி :—						
ஆதிவாரம் நாள் 1க்கு திட்டம் ...	0	7	3	23	9	0
மங்களவாரம் ,, ...	0	6	0	19	8	0
சுக்ரவாரம் ,, ...	1	8	2	78	8	8
சனிவாரம் ,, ...	0	8	9	28	7	0
பிரதோஷம் ,, ...	5	13	7	140	6	0
அமாவாசை ,, ...	8	8	6	102	6	0
திருவாதிரை ,, ...	0	9	2	6	14	0
கார்த்திகை ,, ...	7	8	1	97	9	1
அசலேஜ்வரம் மகாப்பு ,, ...	1	9	8	19	4	0
நித்தியபடி மாகாப்பு ,, ...	0	4	0	91	8	0
நிந்தியாக்கினி ஹோமம் ,, ...	0	12	10	293	9	0
ஆடிமாசபூசை ஏறுபடி ,, ...	11	12	8	11	12	8
ஆவணிமாச பூசை ஏறுபடி ,, ...	13	6	5	13	6	5
புரட்டாசிமீ ,, ,, ...	19	3	11	19	3	11
ஐப்பசிமீ அன்ன பிஷேக பூசை ,, ...	141	8	9	141	8	9
கார்த்திகைமீ பூசை ஏறுபடி ,, ...	9	10	0	9	10	0
மார்கழி தைமீ பூசை ஏறுபடி ,, ...	25	11	0	25	11	0
மாசிமீ பூசை ஏறுபடி ,, ...	13	4	6	13	4	6
பங்குனிமீ பூசைஏறுபடி ,, ...	11	7	0	11	7	0
சித்திரைமீ பூசைஏறுபடி ,, ...	13	8	7	13	8	7

	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
வைகாசிமீ பூசை ஏறுபடி ,, ...	11	7	4	11	7	4
ஆனிமீ பூசை ஏறுபடி ,, ...	14	14	2	14	14	2
ஆடி அயன அபிஷேக ஏறுபடி ,, ...	189	13	3	189	13	3
ஆடிச்சுவாதி ஏறுபடி ,, ...	11	15	11	11	15	11
ஆடி பதினெட்டாம் பேறு ஏறுபடி ,, ...	39	13	10	39	13	10
ஆடிப்பூர உத்சவம் ஏறுபடி ,, ...	400	0	0	400	0	0
விநாயகசதுர்த்தி ஏறுபடி ,, ...	19	3	4	19	3	4
ஆவணி உள் ஆதித்தன் ஏறுபடி ,, ...	2	1	7	2	1	7
ஆவணி மூலம் ஏறுபடி ,, ...	10	2	0	10	2	0
கேதார பூசை ஏறுபடி ,, ...	5	10	8	5	10	8
நவராத்திரி ஆதி அந்தம் ஏறுபடி ,, ...	1	11	10	1	11	10
நவராத்திரி அங்குரம் ,, ...	0	10	0	0	10	0
நவராத்திரி நாள் 10க்கு திட்டம் ...	40	15	8	40	15	8
அட்டதுர்க்கை அபிஷேக நைவேத்தியம் ...	10	2	6	10	2	6
நவராத்திரி கட்டளை உபயம் நாள் 1-க்கு திட்டம் ...	126	12	2	126	12	2
மகா நவமி ஏறுபடி ...	3	7	11	3	7	11
வீரவண்டையம் அபிஷேகம் & நைவேத்தியம் நாள் 1-க்கு திட்டம்	2	5	1	2	5	1
சரஸ்வதி பூஜை களஞ்சியம் ஏறுபடி ...	5	6	2	5	6	2
விஜயதசமி ஏறுபடி திட்டம் ...	3	5	2	3	5	2
அம்பு மண்டபம் ஏறுபடி ...	55	7	7	55	7	7
நிறைபணி ஏறுபடி திட்டம் ...	229	3	6	229	3	6
ஐப்பசி விஷு அபிஷேகம் ...	179	4	11	179	4	11
தீபாவளி ஏறுபடி ...	240	10	2	240	10	2
சூரசம்ஹாரம் ஏறுபடி உள்குமாரர் ...	12	5	4	12	5	4
விடயாத்தி ஏறுபடி ...	13	4	5	13	4	5
ஐப்பசி பரணி ஏறுபடி ...	2	12	11	2	12	11
ஐப்பசி பூரம் ஏறுபடி ...	11	8	9	11	8	9
பொரி நைவேத்தியம் ...	3	0	9	3	0	9
கார்த்திகை சோமவாரம் நாள் 4க்கு ...	37	8	2	37	8	2
கார்புதுர் ஏறுபடி ...	9	14	1	9	14	1
திருக்கார்த்திகை அங்குரம் ...	1	3	5	1	3	5
மடைப்பள்ளி விளக்கு மறு தினமும் ...	9	1	6	9	1	6
சொக்கு மரம் ஏறுபடி ...	39	2	9	39	2	9
திருக்கார்த்திகை ஏறுபடி ...	13	2	0	13	2	0

	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
திருக்கார்த்திகை ஏறுபடி ...	17	11	0	17	11	0
தனுர்மீ கணப்பு நாள் 29க்கு ...	22	15	0	22	15	0
தனுர்மீ திருப்பட்சி ஏறுபடி ...	8	13	9	8	13	9
திருப்பட்சி ஏறுபடி ராஜன் கட்டளை ...	63	10	4	63	10	4
ஆருத்ரா தெரிசனம் அபிஷேகம் ...	244	2	8	244	2	8
ஆருத்ர தெரிசனம் சுவாமி முன் மண்டபம்வர ...	159	15	11	159	15	11
சங்கராந்தி அபிஷேகம் ...	203	6	5	203	6	5
சங்கராந்தி பாவாடை ...	75	12	4	75	12	4
சங்கராந்தி விநியோக செலவு ...	77	5	3	77	5	3
பூசம் ஏறுபடி ...	3	3	6	3	3	6
களஞ்சியம் பந்தக்கால் முகூர்த்தம் ...	0	2	11	0	2	11
பூஜை மண்டப பாவாடை & அலங்காரம் ...	106	13	10	106	13	10
மகாவியதீர்த்தம் ...	14	1	5	14	1	5
பிசான்புதுர் ஏறுபடி ...	11	7	1	11	7	1
மகாசிவராத்திரி அபிஷேகம் ...	111	15	5	111	15	5
சித்திரை விஷு அபிஷேக ஏறுபடி ...	200	13	0	200	13	0
கிரகண அபிஷேகம் ...	197	12	11	197	12	11
புதுப்பஞ்சாங்கம் வாசிக்க திட்டம் ...	18	0	7	18	0	7
அட்சய திருதியை ...	4	6	6	4	6	6
வேடை உச்சி நைவேத்தியம் ...	13	9	3	13	9	3
சித்திரை பரணி சீராளன் கறி ...	20	0	10	20	0	10
அக்கினி நட்சத்திரம் நாள் 9-க்கு ...	87	15	8	87	15	8
விசாகம் பால் மாங்காய் ...	14	6	2	14	6	2
விரை முகூர்த்தம் ...	4	7	6	4	7	6
சித்திரை கோடை உத்ஸவம் ...	41	12	1	41	12	1
ஊஞ்சல் உத்ஸவம் ...	40	7	1	40	7	1
பானக பூசை ஏறுபடி ...	46	12	3	46	12	3
				1600	0	0
Grand Total Rs.	3491	9	8	21282	4	8

செய்திகள்

தருமையாதீனத்தில்

அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் 29—4—62 ஞாயிற்றுக்கிழமை சமயாசாரியர் நால்வருள் ஒருவரான திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை விழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. அன்று காலை அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. இரவு அப்பர் சுவாமிகள் அற்புதப்பதிக விளக்கம், அற்புதப்பதிகப் பாராயணம் இவற்றுடன் வீதிவலமாக சிவிகையில்வந்தகாட்சி சைவமெய்யன்பர்கள் உள்ளத்தின் உள்ளுணர்ச்சியைத் தூண்டும்வகையில் சிறப்புற அமைந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அற்புதப்பதிக விளக்கத்தைத் தொடங்கிவைத்து நான்கு வீதிகளிலும் நிலந்தோயாத் திருவடி தீண்ட அப்பர் சுவாமிகள் வீதிவலத்திற்கு உடன் எழுந்தருளினார்கள். ஸ்ரீ கயிலாய நிலையத்திற்கு எதிரில் அப்பர் சுவாமிகள் சிவிகை வந்ததும் ஸ்ரீ கயிலாய நிலையத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத்திற்கு ஆராதனைகள் நிகழ்ந்தன. மாயூரம் முதலிய இடங்களிலிருந்து விழாவிற்கு வந்திருந்த பெருமக்களுக்கும் மற்றவர்களுக்கும் நிவேதனங்கள் வழங்கப்பட்டன.

முதன்முதலாகத் திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் சூலை தீர்த்து ஆட்கொண்ட போது பாடப்பெற்ற " கூற்றாயினவாறு விலக்ககிலீர் " என்ற அற்புதப் பதிகத்திற்கு விளக்கம் கூறினார்கள். பின்னர் நான்கு வீதிகளிலும் முறையே வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஸ்ரீமத். சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், கல்லூரிப் பேராசிரியர்கள் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் முதலியவர்களும் அற்புதப் பதிக விளக்கம் கூறினார்கள். முடிவுரையாகத் திருவாசகமணியவர்கள்

அப்பர் சுவாமிகள் ஐக்கியத்தைப்பற்றிய விளக்கம் கூற வீதியுலா இனிது நிறைவெய்தியது. குருபூஜை விழாவைக் குறித்து "அப்பர் சுவாமிகள் அற்புதவிளக்கம்" என்ற சிறு நூல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் திருவுள்ளப்படி வெளியிட்டு வழங்கப் பட்டது.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான

மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்

மணக்குடி மாயூரத்திற்கு அருகில் தருமையின் ஈசானத்திசையிலே விளங்கும் திருத்தலம். பார்வதிதேவியார் இறைவனை மணந்து திருமணக்கோலத்தோடு எழுந்தருளிய பெருமைக் குரியது. இவ்வூரில் உள்ள பொறையான் திருக்கோயிலும் மிக்க சிறப்புடையது.

இத்தலத் திருக்கோயிலை மிகச் சிறந்தமுறையில் திருப்பணி செய்விக்கவேண்டுமென்பது ஸ்ரீலஸ்ரீகயிலைக்குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளம். திருப்பணிகள் தொடங்கப்பெற்றன. சுவாமி அம்பாள் சந்நிதியில் புதிய மண்டபம் எழுப்பப்பெற்றது. திருமடைப்பள்ளி திருத்தப்பெற்றது. பிராகாரங்கள் தளவரிசை யிடப்பெற்றன. சுதைவேலைகள் பலவும் செய்விக்கப்பெற்றன. புத்தம்புதிய மெருகோடு பழைமைமாறிப் புதிய உருவத்துடன் திருக்கோயில் திருப்பணி நிறைவுற்றது. திருக்கோயிலுக்கு மக்கள் எளிதில் வந்து வழிபடும் வகையில் கிழக்கே ஒரு வாயிலும் திறக்கப்பெற்றது.

இவ்வாறு திருப்பணி முடிந்ததும் 23—4—62 திங்கட்கிழமை கும்பாபிஷேகம் என்று முடிவுசெய்யப்பெற்றது. தருமையாதீனத் திற்கே உரியவகையில் யாகசாலை அலங்காரங்கள் செய்விக்கப் பெற்றன. யாகசாலையில் கடாகர்ஷணங்கள் செய்யப்பெற்று 21—4—62 சனிக்கிழமையன்று யாகசாலை பூசை ஆரம்பமாயிற்று. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருப்பணி தொடங்கியதிலிருந்து அடிக்கடி எழுந்தருளி பார்வையிட்டருளி னார்கள். தேவஸ்தானம் நிர்வாகிகள் அனைவரும் மிக்க ஊக்கத் தோடு பணிசெய்தார்கள்.

23—4—62 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு மகாகும்பாபிஷேகம். பலவூர்களிலிருந்தும் மக்கள் சாரிசாரியாக வந்து கொண்டிருந்தனர். பெருமக்கள் பலரும் கும்பாபிஷேகத்திற்கு வந்திருந்தனர். காலை 9 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளினர்கள். முறையாக பூர்ணாகுதிகள் நடைபெற்றன. கடம் புறப்பாடாயிற்று. 10-55 மணிக்குள் மகாகும்பாபிஷேகமும். 12 மணிக்கு மகாபிஷேகமும் நடைபெற்றன.

பாராட்டு விழா

மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரர் திருக்கோயிலைப் புதுப்பித்து மிகச் சிறந்த முறையில் கும்பாபிஷேகம் செய்வித்தருளியதைப் பாராட்டும்வகையில் மணக்குடித் திருக்கோயிலில் கும்பாபிஷேகம் நிகழ்ந்தவுடன் சைவப்பெரியோர் பலரும் ஒன்றுகூடினர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை முறைப்படி வரவேற்றனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் விழா மேடைக்கு எழுந்தருளினர்கள். எல்லோருக்கும் தனித்தனியே ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அழைத்து இன் சுவைப்பானங்கள் வழங்கச்செய்து இளைப்பாற்றி அமரச்செய் தார்கள்.

மாயூரம் திரு. கே. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை அவர்கள் பாராட்டு விழாவினைத் தொடங்கிவைத்து விழா விளக்கம் கூறினர் கள். மணக்குடிச் சைவப்பெருமக்கள் சார்பில் திரு. எம். எஸ். இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பாராட்டுரையொன்றை வாசித்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கட்குப் பொன்னுடை போர்த்தி மாலையணிவித்து வெள்ளிச்சட்டத்தால் அலங்கரிக்கப் பெற்றிருந்த பாராட்டுரையைச் சமர்ப்பித்து வணங்கித் திருநீறு பெற்றுக்கொண்டார்கள். மாயூரம் திரு. பி. திருஞானம் பிள்ளை பி. ஏ., பி எல்., அவர்கள், திருக்கடவூர் திரு. கே. கனகசபைப் பிள்ளை அவர்கள், நாகை அறநிலையத் துணைக்கமிஷனர் திரு. மாதவம் பிள்ளை அவர்கள், காட்டுமன்னார்குடி நாட்டுச்சின்னப் பண்ணை திரு எம். இராமலிங்கம் பிள்ளை அவர்கள், கீழப்பெரும் பள்ளம் திரு. சம்பந்தம் பிள்ளை அவர்கள் முதலியோர் பாராட் டுரைகள் தெரிவித்துக்கொண்டார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அருளுரைக்குப்பின் கயிலைத் திருப்பதிகம் ஓதப்பெற்று விழா இனிது நிறைவுற்றது.

இன்னிசையும், சொற்பொழிவும்

மணக்குடி மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு 22—4—62 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குத் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன் அவர்களும், 23—4—62 திங்கட்கிழமை மாலை 6 மணிக்குத்தருமையாதீனப்பல்கலைக்கல்லூரித்தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும் சொற்பொழிவாற்றினர். 23—4—62 திங்கட்கிழமை மாலை 5 மணி முதல் வேளூர் திருமுறைவகுப்பு ஆசிரியர் திரு. க. சொக்கலிங்கம், சீகாழித் திருமுறைவகுப்பு ஆசிரியர் திரு. சம்பந்தம் ஆகியோர்களால் பண்ணிசையரங்கு நிகழ்த்தப்பெற்றது. இரவு 7 மணிக்கு மணக்குடி திரு. கை. முருகையாப் பிள்ளை அவர்கள் தலைமையில் வாரவழிபாடு (ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கிளைக் கழகம்) என்ற பெயரில் தொடங்கப்பெற்றது. எல்லோரும் முறையாகத் திருக்கோயிலை வலம் வந்து வழிபாடு செய்தனர்.

திருவீதியுலா

இரவு 8-30 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளியானுர்கள். ஸ்ரீ சௌந்தரநாயகியம்பாளுக்கு மிக அழகிய முறையில் சந்தனக்காப்பு அலங்காரம் செய்யப்பெற்றிருந்தது. முறையாகத் திருக்கோயில் வழிபாடுகளை முடித்துக்கொண்டு, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் பஞ்சமூர்த்திகட்கும் ஆராதனைகளுக்கு எழுந்தருளினுர்கள். சிறந்த மேளவாத்திய இன்னிசையுடன் பஞ்சமூர்த்திகள், ஸ்ரீ நல்லதாயார் திருவீதியுலா நிகழ்ந்தது. வாணவேடிக்கைகள் நடத்தப்பெற்றன. இரவு வழிபாட்டில் ஏறத்தாழ இரண்டாயிரவர்க்குமேற்பட்டோர் வந்திருந்து வழிபாடாற்றியது குறிப்பிடத்தக்கது.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீ சட்டைநாதசுவாமி புறப்பாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பல்லாண்டுகளாக நின்றுபோயிருந்த ஸ்ரீ சட்டைநாத சுவாமி புறப்பாட்டு விழாவை ஏழாண்டுகளாகத் தொடங்கி வைத்து இத் திருவிழா ஆண்டுதோறும் நடைபெற ஆணையிட்டு அருளியபடி இந்த ஆண்டு 27—4—62 வெள்ளிக்கிழமை காலை

ஸ்ரீ முத்துச்சட்டைநாத சுவாமிக்கு விசேஷ அபிஷேகங்கள் அஷ்டபைரவர் மண்டபத்தில் நடத்தப்பெற்றன.

மாலை 4 மணி முதல் ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்கள் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், வித்துவான், சிரோமணி, திரு.வி. சபேசன் ஆகியோர் "சட்டைநாதர், ஆபதுத்தாரணர்மாலை" ஆகிய தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

இரவு 7 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். ஸ்ரீ முத்துச்சட்டைநாதருக்கு ஆராதனைகள் நடைபெற்றன. வேதியர் பலரும் சுமந்துவர நடைபாவாடை விரிக்கப்பெற்று நெய் தீவர்த்தி விளக்கத்தோடு ஸ்ரீ முத்துச்சட்டை நாதர் பிராகாரங்களில் உலாவந்தார். திருத்தோணிமலையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆபதுத்தாரணர்மாலை பாராயணத்துடன் மிக உருக்கத்தோடு வழிபாடாற்றினார்கள். இரவு 12 மணிக்கு வழிபாடு நிறைவுற்றது. மகாப்பிரசாதப்பைகள் வழங்கப்பெற்றன.

ஆதீன தேவஸ்தானங்களில்
சித்திரைத்திங்கட் பெருவிழா

திருக்கடவூரில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீஅமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட் பெருவிழா 10—4—62 செவ்வாய்க்கிழமை முதல் 19—4—62 வியாழக்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. திருவிழாநாட்களில் இன்னிசை நிகழ்ச்சிகளும், கதாகாலக்ஷேபமும், சமயச்சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

15-4-62 ஞாயிற்றுக்கிழமை மார்க்கண்டேயருக்கு அனுக்ரகம் செய்த திருநாள். அன்று ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி நூற்றுக்கால் மண்டபத்திற்கு எழுந்தருளுகின்ற வீரநடன தரிசனமும், காலசம்கார சேவையும் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டார்கள்.

திருப்பனந்தாளில்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட்பெருவிழா 10—4—62 செவ்வாய்க்கிழமைமுதல் தொடங்கி

19—4—62 வியாழக்கிழமை முடிய உள்ள நாட்களில் சிறப்புற நிகழ்ந்தது. திருவிழா நாட்களில் இன்னிசை நிகழ்ச்சிகளும், கதாகாலக்ஷேபமும், சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன. அறிஞர்கள் பலர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

13—4—62 வெள்ளிக்கிழமையன்று திருமுறை விழாவும், தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும் நிகழ்ந்தன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் வித்துவான், திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., பி. எல், அவர்களும், கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களும் சொற்பொழிவாற்றினர். இரவு பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு திருமுறைகள் யானைமேல் ஒப்பனை செய்யப்பெற்று வீதிவலமாகக் கொணரப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருளால் தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

திருவையாற்றில்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்ச நதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திங்கட் பெருவிழா 10—4—62 செவ்வாய்க்கிழமை முதல் 19—4—62 வியாழக்கிழமை முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சி களும் சிறந்த முறையில் நடைபெற்றன.

சப்தஸ்தானத் திருவிழா

தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்ச நதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் இந்த ஆண்டு 21—4—62 சனிக்கிழமை சப்தஸ்தான விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ ஐயாறப்பர் காலையில் புறப்பட்டு திருப்பழனம், திருச்சோற்றுத் துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திரு நெய்த்தானம் ஆகிய ஆறு ஊர்களையும் வலமாக வரும் காட்சி தமிழ்நாட்டின் தலைசிறந்த திருவிழாக் காட்சி என்று சொல்ல வேண்டும். பல்லாயிரம் மக்கள் பின்தொடர்ந்து சாரிசாரியாக வலம் வருவதும், பஜனை கோஷ்டிகள் பாராயணம் செய்து கொண்டு வருவதும், அவ்வவ்வூர்களிலும் அன்பர்கள் அன்ன தானம் செய்வதும் குறிப்பிடத்தக்கவை. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி சப்தஸ்தானத் தலங்களை யும் வழிபாடாற்றினார்கள்.

சீகாழியில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமிதேவஸ்தானத்தில் சித்திரைத் திங்கட் பெருவிழா 10—4—62 முதல் தொடங்கி 19—4—62 முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. விழா நாட்களில் சிறந்தஅறிஞர்களின்சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும், கதாகாலக்ஷேபங்களும் நடைபெற்றன. நாள் தோறும் திருஞானசம்பந்தர்புராணப் பிரசங்கம் சென்னை கயப்பாக்கம். திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது.

திருமுலைப்பால் திருவிழா :- 11—4—62 புதன்கிழமையன்று திருஞானசம்பந்தசுவாமிகளுக்குப் பிரமதீர்த்தக் கரையில் ஞானப்பால் அருளிய திருநாள். அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். சம்பந்தர் புறப்பாட்டின்போது ஆங்காங்கே அற்புதப் பதிக விளக்கவுரை பலராலும் நிகழ்த்தப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அற்புதப் பதிக விளக்கவுரையைத் தொடங்கிவைத்து ஆசியருளினார்கள். திருவாசகமணி. திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல், அவர்கள் திருமுலைப்பால் ஐதிகப் பதிக விரிவுரை நிகழ்த்தினார்கள். சென்னை மாநில அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களும் திருஞானசம்பந்தர் அற்புதங்களைப்பற்றிப் பல சிறந்த கருத்துக்களைக்கூறி திருமுலைப்பால் அருளும் காட்சியைக்கண்டு களித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் அருளால் " திருமுலைப்பால் சிறப்பு " என்ற சிறு துண்டுப்பிரசுரமும் அன்பர்களுக்கு வழங்கப்பட்டன.

திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் :- 16—4—62 திங்கட்கிழமையன்று திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் சிறப்புற நிகழ்ந்தன. இரண்டு சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. இரவு பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்தொடு திருமுறைகள் யானைமேல் அலங்கரிக்கப்பெற்று வீதிவலமாகக் கொணரப்பெற்றன. தேவார வகுப்பு மாணவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருளால் பரிசுகள் வழங்கப்பட்டன.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையம்

மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டின் நான்காவதாண்டுத்தொடக்கவிழா

22—4—62 ஞாயிற்றுக்கிழமை மாலை நிலையத்தின்மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு திருவல்லிக்கேணி பெரியதெருவில் உள்ள ஸ்ரீ அரசடிக்கற்பக விநாயகர் கோயிலிலும், திருவேட்டீஸ்வரன்பேட்டை ஸ்ரீ திருவேட்டீஸ்வரர் கோயிலும் சிறப்பாக நடைபெற்றது. திரு. K. C. நாகலிங்க முதலியாரவர்களும், திரு B. N. முருகேச முதலியாரவர்களும். ஸ்ரீ அரசடிக்கற்பகவிநாயகருக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தி, திருமுறைவிழாவும் நடத்திவைத்தார்கள். குழுவினருக்குச் சிற்றுண்டியும் வழங்கினுர்கள். அறங்காவலர் திரு. மணி முதலியார் உடனிருந்து சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

திரு. P. செல்வநாத செட்டியாரவர்களும், திரு T. இராமலிங்கப்பா அவர்களும் ஸ்ரீ வேட்டீசுவரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நிகழ்த்திக் குழுவினர்க்குச் சிற்றுண்டி அளித்தார்கள். இராவ்சாகிப். திரு. நல். முருகேச முதலியாரவர்கள் தலைமையில் சமயப் பிரசார வழிபாட்டுக் குழுவினர் நான்காவதாண்டு தொடக்கவிழா நடைபெற்றது வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனுர் B. A., அவர்கள் "சங்க இலக்கியங்களில் வழிபாடு" என்பது பற்றியும், திரு. கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் "விபூதிச் சிறப்பு" என்பது பற்றியும் விரிவுரை நிகழ்த்தினுர்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றியுரை கூறினுர்கள். திருவேட்டீசுவரன்பேட்டை, அறங்காவலர். திரு. சிவசிதம்பர முதலியாரவர்கள் உடனிருந்து நடத்தித்தந்தார்கன். திரு. P. சுவாமிநாதன், திரு. S. ஞானப்பிரகாசம், திரு. சி. கபாலி ஆகியோர் திருமுறை ஓதிச் சிறப்பித்தனர்.

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்

உருவத்தை யுடையோர் தம்மி லுயர்கலை கற்றோர்தம்மிற்
சருவத்தை யும்புரக்குந் தரணியர்தம்மிற் றக்க
திருவத்தை யுடையதே வேந்திரர் தமிற் றவத்தோர்தம்மிற்
கெருவத்தை யுடையோரெங்குங் கேடற வாழ்ந்ததுண்டோ.

எதிர்காலம் ☞	கே. முத்துஜோதிடர்

(சுபகிருதுஞு வைகாசிமீ 1உ முதல் 32உ முடிய)

(14—5—62 முதல் 14—6—62 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி நான்கு பாதமும் பரணி முதல் பாதமும், சுபசோப னுதிகளையும், மங்களத்தையும் தரும். உத்தியோக லாபம் நஷ்ட மான பொருள் வரத்து தொழில் விருத்தி இவைகளை உண்டு பண்ணும். பரணி 2, 3, 4 பாதமும், கார்த்திகை முதல் பாதமும் மிச்ரபலனைத்தரும், ஆரோக்யக் குறைவு உண்டுபண்ணும். எதிர்பாராத பல கவலைகளையும் கொடுத்து மனம் நிம்மதி இல்லா மல் உண்டுபண்ணும். சனி, புதன் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி, மிருகசீரிஷம் $\frac{1}{2}$.

ரிஷபராசி 9 பாதங்களும் சுபபலனைத் தரும். உத்தியோக உயர்வு, நஷ்டதனப்ராப்தி, இடம் மாறுதலுடன் விசேஷ லாபம், நூதன சிநேகிதர்களுடைய சேர்க்கை, சகல காரிய சாதனங்கள் இவை ஏற்படச்செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$.

மிருகசீரிஷம் 3, 4 பாதங்களும் திருவாதிரை முதல் பாதமும் சுபத்தைத்தரும். இல்லறசுகம் ஓங்கும்; ஆரோக்யம் உண்டாகும்; திருவாதிரை 2, 3, 4 பாதமும் புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் வெகுகாலமாய் எதிர்பார்த்து நடவாத காரியங்கள் சுவல்ப நஷ்டத்தோடு சாதனமாகும். சத்ருமைத்ரம் ஏற்படச்செய்யும். சனி செவ்வாய் சுபமாகும்.

4 கடகம் புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும், விவசாய விருத்தியைத் தரும். சபா பூஜ்யத்வம் லோக பூஜ்யத்வம் ஏற்படச்செய்யும். எங்கும் விசேஷ மான கீர்த்தி ஏற்படும் நூதன தொழில் முறையும் விவகாரத்தில் அனுகூலமும் ஏற்படும். மனம் சாந்தி அடையும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். புதன் வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் உத்தியோக உயர்வைத் தரும். குடும்பம் ஓங்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். பூரம் நான்கு பாதங்களும் அதிக செலவினங்களும் எதிர்பாராத கவலைகளையும் காட்டும். உத்திரம் முதல்பாதம் லாபகரத்தோடு இடம்மாறுதலும் உத்தியோக உயர்வும் கீர்த்திபத்ரமும் கிடைக்கச்செய்யும், குடும்ப சுகம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் தெய்விகத்தன்மையோடு பிரகாசிக்கச் செய்யும். வெகுதூர தேசத்திலிருந்து எதிர்பாராத படி பெரியோர்களுடைய நட்பைத்தரும். நினைத்ததெல்லாம் சுலப சாத்யமாகும். சத்ருக்கள் சரண் அடைவார்கள், ஸ்தாவர சங்கம சொத்துக்கள் சேரும். தொழில் ஓங்கும், புதன் வியாழன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் விசேஷ தனலாபத்தைத் தரும். சுபசோபனுதிகளை உண்டுபண்ணும். கடன் தீரும். நஷ்டமான பொருள்கள் தானுக வந்து சேரும். மேலோர் பெரியோர் களுடைய சந்திப்பு அடிக்கடி ஏற்படச்செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம் விசாகம் $\frac{1}{4}$ அனுஷம், கேட்டை

விசாகம் 4-ம் பாதமும், அனுஷம் நான்கு பாதங்களும் விசேஷ சுபமிராது. அடிக்கடி சஞ்சலத்தை உண்டுபண்ணும். காரியங்கள் விக்னமாகும். வீண் அலைச்சல்களையும் தரும். கேட்டை நான்கு பாதங்களும் கிரக சுகபோகங்களையும் உத்தி யோக லாபத்தையும் உண்டுபண்ணும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கை உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். சனி, புதன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். தெய்வபலத் தால் சகலமும் சாதிக்கச் செய்யும். ஆரோக்யம் உண்டுபண்ணும்.

நஷ்ட தனங்கள் தானுகவந்து சேரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுபசந்தோஷத்தைத்தரும், மேல் பதவிகளும் ஸ்திர சுகவாசமும் ஏற்படச்செய்யும். நூதன பிரபு தரிசனமும் பந்து மித்ராளுடைய சேர்க்கையும் ஆரோக்யமும் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11 கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கச்செய்யும். அடிக்கடி இடம் மாறலேயும் சஞ்சார பலனேயும் தரும். வெகு தூரத்திலிருந்து ஆப்த சிநேகிதர்களேயும் பந்துக்களேயும் சந்திக்கச் செய்யும். தொழில் ஓங்கும். இல்லற சுகத்தைத் தரும். திங்கள், புதன் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும், நூதன ஜீவன லாபத்தைத் தரும். தொழில் மூலம் விசேஷ லாபம் ஏற்படச்செய்யும், ஸ்திர சுகவாசம் ஏற்படும். நூதன பிரபுக்களுடைய சிநேகமும் உண்டுபண்ணும் புத்திராதிகளால் சுபசந்தோஷம் உண்டாகும். தெய்வபலம் முன்னிற்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

ஷை வைகாசிமீ" அமைதியைத்தரும். உலகை எதிர்நோக்கி நிற்கும் அனேக ஆபத்துக்கள் தானுக விலகும்; எங்கும் மஹா ஜனங்களுக்கு ஆஸ்தீகபுத்தி விசேஷமாய் ஏற்படச் செய்யும். விந்தியோத்தர தேசத்திலும், மலேப்பிரதேசங்களிலும், கிழக்கு, மேற்கு த்வீபாந்தரங்களிலும் இயற்கை மாறுதல்களால் பலவித சிரமம் காட்டும். தொத்து நோய்கள் பரவும். அங்காங்குள்ள ஆஸ்தீக மகாஜனங்கள் மேற்கண்ட சில சிரமங்கள் விலகுவதின் பொருட்டு, புண்ணிய க்ஷேத்திரங்களில் மகாருத்ராபிஷேகங்களும் லக்ஷம்கோடி அர்ச்சனேகளும் கிராமதேவதைகளுக்குவிசேஷ பூஜாதிகளும் செய்துகொண்டு ஆராதித்துவர உலகம் பூராவாகவும், விசேஷமான சௌக்யத்தோடும் இருக்கச்செய்யும். கடவுள் காப்பாராக.